# St. DAVID'S HIGH SCHOOL

(Founded 1717)

# MAGAZINE

CUDDALORE O. T.

ARA PUBLIC LIBRARY
3-FEB 958
MADRAS



SERVICE & SACRIFICE

January 1958

(Pushya 1879)

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| திருக்குறள் | ... | 1 |
| காரைக்காட்டை நோக்கி | ... | 7 |
| கடமையும், பாசமும் (நாடகம்) | ... | 11 |
| வானொலிப் பேச்சு | ... | 19 |
| தென்னக நகைச்சுவை மன்னன் | ... | 25 |
| இறுதிச்சொல் அலங்காரம் | ... | 28 |
| தமிழகம் தந்த தியாகச் செம்மல்கள் | ... | 29 |
| வியப்பினும் வியப்பே | ... | 34 |
| தேசீய மாணவர் படை — வருடாந்திர பயிற்சி முகாம் '57—'58 | ... | 35 |
| மதம் (நாடகம்) | ... | 41 |
| சாரணீயம் (பாட்டு) | ... | 44 |
| அறிஞர்களின் அறிவுரைகள் | ... | 45 |
| நீவீர் அறிவீரா ? | ... | 47 |
| பின்பற்றுக | ... | 48 |
| தலைவர்கள் தனியுரைகள் | ... | 49 |
| கண்டுபிடியுங்கள் | ... | 51 |
| எல்லாம் சமரசம் | ... | 53 |
| கடைச்சொல் முடிக்கும் சொற்கள் | ... | 57 |
| School Report | ... | 58 |
| The Power of Words | ... | 60 |
| School Magazines and their Uses | ... | 61 |
| Hindi | ... | 63 |

FEB 1958

# திருக்குறள்

உலகத்திலுள்ள எல்லா மக்களுக்கும், எல்லா நாட்டினர்க்கும், எல்லா மதத்தினர்க்கும் பொருந்தும் வகையில் — அவர்கள் மனமுவந்து ஏற்கும் வகையில் — அமைந்துள்ள ஒரே நூல் — ஒப்பற்ற நூல் — திருக்குறள் ! கடற் கோள்களினாலும், ஆற்றுப் பெருக்கினாலும், பொறாமை, சூழ்ச்சி, வஞ்சகம் இவையனைத்தும் ஒருங்கே அமைந்த நயவஞ்சகர்களினாலும் எண்ணற்ற தமிழ்நூல்கள் அழிந்துவிட்டன! இருப்பினும் இரண்டாயிரம் ஆண்டுகளாக சீரும் சிறப்பும் குன்றாது சிறந்திலங்கிவரும் நூல் திருக்குறள் !!

உலகத்து மக்களெல்லாம் ஒருங்கே போற்றும் ஒப்பற்ற நூலாம் திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர் என்பது தெரிந்ததே ! அந்நூல் அறம், பொருள், இன்பம் என மூன்று பாகங்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதும், 133 அதிகாரங்களையும், 1330 குறட்பாக்களையும் உடையது என்பதும் தெரிந்ததே !

அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் எனும் முப்பால்களாகப் பிரிக்கப்பட்டிருப்பதால் *முப்பால்* என்றும், தமிழர்கட்குச் சிறந்த நீதி நூலாக விளங்கி வருதலாலும், தமிழர்கால அமைப்பு முறைகளை விளக்குவதாலும் *தமிழ்மறை*யென்றும், உலகத்திற்கே பொதுவான நீதிமுறைகளை வகுத்துக் கூறுவதால் *பொதுமறை*யென்றும், *பொய்யாமொழி*, *வாயுறை* **வாழ்த்து** என்றும் திருக்குறள் அழைக்கப்படும்

ஒப்புயர்வற்ற கொள்கைகள், நீதிமுறைகள் பல இருந்தும் திருக்குறள் மக்கள் மன்றத்தில் இடம் பெறாமல் இருந்த காலம் உண்டு ! படித்தவர்களிடமும், பண்டிதர்களிடமும் மட்டுமே திருக்குறள் புழங்கிவந்த காலம் ஒன்றுண்டு ! இவ்விணையிலா நூலின் பெருமைகளைத் தமிழர்கட்குக் காட்டும் முகத்தான் "குறள் மாநாடு" கூட்டித் தமிழ்ப் பேரறிஞர்களைப் பேசவைத்துப் 'பள்ளிப் பாடப் புத்தகங்களில் திருக்குறளையும் பாடமாகச் சேர்க்கவேண்டும்" என்று தீர்மானம் நிறைவேற்றி

அரசியலார்க்குப் பெரியார் ஈ. வே. ராமசாமி அவர்கள் அனுப்பினர்! அதன் பின்னர்தான் அக்காலக் கல்வியமைச்சர் திரு அவிநாசிலிங்கம் அவர்கள் திருக்குறளையும் மாணவர்க்குக் கற்பிக்கவேண்டுமென்று சட்டமியற்றினர்!!

திருக்குறளாசிரியர் திருவள்ளுவரின் பிறப்பைப்பற்றி ஆராயப் புகுந்தவர்களிற் சிலர் "திருவள்ளுவர் ஆதி என்கிற புலைச்சிக்கும், பகவன் என்கிற பார்ப்பனனுக்கும் பிறந்தார்" என்பதாகக் கூறுகின்றனர். மற்ருெரு சாரார் "ஆதிக்கும் பகவனுக்கும் திருவள்ளுவர், கபிலர் ஔவையார் உள்ளிட்ட எழுவர் பிறந்தனர்' என்பதாகக் கூறி முந்தியவர்களை மிஞ்சி விட்டனர்; நிரூபிக்க ஒரு பாடலையும் புனைந்தெழுதிவிட்டனர்! "இம்மாதிரி ஆராய்ச்சிகளால் திருக்குறளின் வளர்ச்சிக்கேதும் நன்மை ஏற்படாது! அதன் வளர்ச்சிக்கான முறைகளை ஆராய்ந்து அவற்றை செயல் நடத்தவேண்டும்" என்பார் திருக்குறளார் வீ. முனுசாமி, B. A., B L.,

*"எல்லாப் பொருளு மிதன்பாலுள விதன்பால்*
*இல்லாத வெப்பொருளு மில்லையால்..."*

எனும் மதுரைத் தமிழ் நாகனர் கூற்றுப்படி, திருக்குறளில் பல்வேறு துறைப்பட்ட கருத்துக்கள் பொதிந்து கிடக்கின்றன. நாட்டின் இலக்கணம், நாடாள்வோர் தகுதி, ஆட்சிமுறை, வாய்மை, ஒழுக்கம், கல்வி, ஊண் உண்ணமை, வாழ்க்கைமுறை, கொடை முதலிய பற்பல கோணங்களையும் படம் பிடித்துக் காட்டுகிருர் தம் நூலில்!

திருமணச் சடங்குகளில் பெண்ணை ஆணுக்கு அடிமையாக்கும் வழக்கம் சில நாகரிகமற்றவர்களால் நம் நாட்டில் புகுத்தப்பட்டுள்ளது. ஆனல் வள்ளுவர் மனைவியை 'வாழ்க்கைத் துணை' என்றுதான் கூறுகிருரேயொழிய (குறள்: 51) அடிமையென்று யாண்டும் கூறினரில்லை.

பாதாளம் வரை பாயும் பணத்தையும் பட்டினியால் பரதவிக்கும் ஏழையர்களின் கண்ணீர்த்துளிகள் அழிக்கும் (குறள்: 555) என்று எச்சரிக்கின்ருர் நாயனர்.

ஒருவன் பிச்சையெடுத்து உயிர்வாழும்படி இவ்வுலகத்-தைப் படைத்தவன் ஏற்படுத்தியிருந்தால் பிச்சை எடுப்பவனைப் போல் அவனும் அலைந்து திரிந்து கெடுவானாக (குறள் : 1062) என்று சீர்திருத்தக் கொள்கையைக் கூறுகிருர்.

நட்பைப் பற்றிக் கூறுங்கால் 'சிரித்து மகிழ மட்டும் நட்பு கூடாது ; நெறி தவறி செல்லுங்கால் இடித்துக் கூறவும் நட்பு பயன்படவேண்டும்' (குறள் : 784) என்றும் 'நண்பர்க்குத் துன்பம் வருங்கால் விரைந்து உதவி செய்யவேண்டும்' என்றும் (குறள் : 788) நட்பின் தன்மையை• ஆராய்ந்து கூறுகிருர் திருவள்ளுவர்.

கற்பு எனும் பெயரால் உலக அறிவு பெருதபடி—ஆணும் பெண்ணும் சமம் எனும் கொள்கையைத் தரைமட்டமாக்கும்படி — பெண்களைக் குறுகிய இட்டத்துக்குள் அடைத்துவிடும் சமூகக் கதவைச் " சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் (குறள் : 57) எனும் கருத்துப் புரட்சிச் சம்மட்டி கொண்டு தாக்கி உடைத்துத் தூள்தூளாக்குகிருர் !!

துறவிகளின் இலக்கணத்தை வள்ளுவர்,

" *இயல்பாகும் நோன்பிற்கொன்று இன்மை உடைமை*
*மயலாகும் மற்றும் பெயர்த்து* " — (குறள் : 344)

எனும் குறட்பாவின் வாயிலாகத் தெளிவுபடுத்துகின்ருர். 'துறவிகள் எப்பொருளின்மீதும் பற்றுவைக்கக்கூடாது ; பற்றிருந்தால் மீண்டும் மயங்கவேண்டி நேரும்' என்று வள்ளுவனுர் கூறுகின்ருர் மேலேயுள்ள பாட்டின்மூலம். ஆனுல் ஈண்டு உள்ள துறவியெனும் எந்த மடாதிபதிக்கு — எந்த சன்னிதானத்திற்கு — பொருட்கள் மீது பற்றில்லாமலிருக்கிறது ? ஆயிரக்கணக்கான வேலி நிலங்களையுடைய மடாதிபதிகளாவும், கணக்கற்ற சொத்துக்களையுடைய சன்னிதானங்களாகவும்தான் காட்சியளிக்கின்ருர்களே தவிர, வள்ளுவர் வகுத்த இலக்கணத்திற்கு இலக்கியமாக இங்கு யாருமில்லே.

" உலகத்திற் சிறந்த சான்ருேர்கள் பழித்துக் கூறுகின்ற தீயொழுக்கங்களையே விட்டுவிட்டால், சடை வளர்த்தலும்,

மொட்டை அடித்தலுமாகிய புறக்கோலங்கள் தேவையில்லை" எனும் கருத்தை — வருமுன் காக்கும் தன்மையை —

*" மழித்தலும் நீட்டலும் வேண்டா உலகம்*
*பழித்தது ஒழித்து விடின் "* — (குறள் : 280)

எனும் குறள்மூலம் குறிப்புணர்த்துகிறார். " தீயவைகளைச் (பாவங்களை) செய்தால்தான் அவற்றிற்குக் கழுவாயாக மயிர்க் காணிக்கை செலுத்தவேண்டும்; தீயவைகளைச் செய்து அதன்பின் காணிக்கை செலுத்துவதைவிட தீயவைகளையே செய்யாமலிருத்தல் நல்லது " என்பதை அக் குறள்மூலம் மிக அழகாகச் சித்தரிக்கின்றார் பொய்யில் புலவர்

தந்தை பெஸ்கி என்பார் நம் பண்டைப் பெருமை வாய்ந்த தமிழ்நாட்டிற்கு வந்து 'வீரமாமுனிவர்' எனத் தம் பெயரை மாற்றி வைத்துக்கொண்டு தம் தாய்மொழியாகிய இலத்தீனில் திருக்குறளை மொழி பெயர்த்துள்ளார்! G. U. போப் அவர்களால் உலகப் பொதுமொழி ஆங்கிலத்திலும், டாக்டர் கிரால் அவர்களால் ஜெர்மன் மொழியிலும் பெயர்த்து எழுதப்பட்டுள்ளது நம் திருக்குறள் !!

'மனோன்மணீயம்' ஆசிரியர் பெ சுந்தரம் பிள்ளை, M. A., அவர்கள் தம் நூலில்,

*" வள்ளுவர்செய் திருக்குறளை*
*மறுவறநன் குணர்ந்தோர்கள்*
*உள்ளுவரோ மநுவாதி*
*ஒருகுலத்துக் கொருநீதி "*

என்று கூறியுள்ளார். " ஒரு குலம் உயர்ந்தது ! மற்றைய குல மக்களெல்லாம் உயர்ந்தோர்க்குக் குற்றேவல் செய்யவேண்டும் என்று பேதம் கற்பிக்கும் மநுநீதியை திருக்குறளை நன்குணர்ந்தவர்கள் விரும்பமாட்டார்கள் " என்பதே பேராசிரியரின் கருத்தாகும்

" மாந்தர் உள்ளக் கிடக்கையின் தூய உயரிய கருத்துக் கோவைகளைக் கொண்டது திருக்குறள் " என்று மேல்நாட்டு அறிஞர் ஏரியல் என்பார் கூறியுள்ளார்.

*" உறங்குவது போலும் சாக்காடு உறங்கி*
*விழிப்பது போலும் பிறப்பு "* — (குறள் : 339)

எனும் குறட் கருத்தும் " சாவு என்பது தூக்கம் அல்லது மறதி " என்னும் ஆங்கிலக் கவிஞன் வில்லியம் வோர்ட்ஸ் வொர்த் கருத்தும் (William Wordsworth) ஒத்திருத்தல் காண்க.

இவ்வாறெல்லாம் புகழ்ந்து 'கூறப்படும் திருக்குறளை இகழ்ந்து " இதன் கருத்துக்களெல்லாம் இந் நூலுக்கு முன்பே எழுதப்பட்ட வடமொழி நூல்களிலுள்ளன " என்று சிலர் கூறி மகிழ்ந்தனர். எம் மதத்தின் ஓரமும் சாராமல் பாட்டியற்றிய புலவர் பெருமானின் படத்தில் முப்புரிநூலை அணிவித்து நெற்றியில் நீரையும் பூசிவிட்டனர் ; அவருக்கும் அவர்தம் கொள்கைக்கும் இழுக்கு தேடிவிட்டனர் இங்குள்ள சிலர்.

திருக்குறளுக்கு உரையெழுதும் பணியில் பலர் ஈடு பட்டனர். அவர்களுள் பரிமேலழகர் என்பார் எழுதிய உரையே இப்பொழுது வழக்கிலுள்ளது. ஆனல் அவருடைய உரை திருவள்ளுவரின் கருத்துக்கு மாறுபட்டிருப்பதாகத் தமிழ்ப் பேரறிஞர்கள் கருதுகின்றனர். " உரையாசிரியர் பரிமேலழகர் ஆரிய முறைகளையும், தமிழர் முறைகளையும் கலந்து தம் கருத்தைப் புகுத்தி உரையெழுதியுள்ளார் " என்று நாவலர், டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார், M A., B. L., D. Litt, அவர்கள் கூறியுள்ளார். இவர்தம் கருத்தை முன்னுள் அரசவைக் கவிஞர் நாமக்கல் வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்களும் கூறுவாருயினர். மேலும் திரு. ஆறுமுக முதலியார், M.A , B.O.L , L.T., அவர்கள் " நான்கு வருணங்களாகிய குலப் பிரிவைப் பரிமேலழகர் தம் உரையிற் புகுத்திப் பலவிடங்களில் வலிந்து பொருள்கொள்ளினும் நான்கு வருணங்களைப் பற்றியும், அவை தமிழ்நாட்டில் ஏற்றுக்கொள்ளத் தக்கவையென்றும் தம் நூலில் ஆசிரியர் யாண்டும் கூறினரில்லை " என்று கூறியுள்ளார் " பரிமேலழகர் உரை திருவள்ளுவரின் கருத்துக்கு முற்றும் மாருயினவென்பது என் முதலாவது கொள்கை " என்பது மறைந்த தமிழறிஞர் அரசஞ் சண்முகனுர் கூற்ரும். ஆகவே பரிமேலழகர் உரை மாறுபட்டது என்று கொள்க.

*"இரப்பாரை இல்லாயின் ஈர்ங்கண்மா ஞாலம்*
*மரப்பாவை சென்று வந்தற்று"* (குறள்: 1058 'இரவு')

எனும் குறளின் வாயிலாக "இரப்பவர் இல்லையானால் இப்பெரிய உலகின் இயக்கம் பொம்மலாட்டம் போன்றது" என்று கூறுகிறார் வள்ளுவர். ஆனால் அடுத்த அதிகாரத்தில் (இரவச்சம்)

*"ஆவிற்கு நீரென்று இரப்பினும் நாவிற்கு*
*இரவின் இளிவந்தது இல்"* — (குறள் : 1066)

எனும் குறள் வாயிலாக "பசுவிற்கு நீர் வேண்டுமென்று கேட்டாலும் அது நாவிற்கு இழுக்கு" என்று கூறுகிறார். "இந்தக் கொள்கைக் குழப்பம் எங்கிருந்து முளைத்தது ?" என்பதே நம் கேள்வி இம்மாதிரி இடைச் செறுகல்கள் திருக்குறளில் பல இருக்கின்றன என்கின்றனர் சிலர்.

திருக்குறளிலுள்ள எல்லாவற்றையும் ஏற்றுக்கொள்ள முடியாது. நம்மால் ஒப்புக்கொள்ளக்கூடிய — ஏன் எல்லோ-ராலும் 'ஒப்புக்கொள்ளக்கூடிய — கருத்துக்கள் நிறைய இருக்கின்றன.

திருக்குறள் செயலுக்கு வரும் அறங்கரைவது! மக்கள் வாழ வழி வகுப்பது !! பல நிலையறம் தழுவியது! எந்நிலைய மாந்தரையும் முன்னேற்றுவது !! உலகொட்டும் நெறி காட்டுவது !! ஒருவன் வாழ்க்கை அவனைப் பொறுத்தது என்ற உண்மையை அறையும் ஒரே நூல் திருக்குறளாகும் !!

தாழ்ந்த தமிழகம் தலைதூக்கித் தன்னிலை அடைய — வீணர்களால் வீழ்ச்சியுற்ற தமிழகம் விழிப்படையச் செய்ய வேண்டியது தமிழர்களாகிய நம் அனைவரின் தலையாய கடமையாகும்! தமிழ் வாழ்ந்தால், தமிழன் வாழ்வான்! ஆகவே, தமிழ் மொழி காக்கப் புறப்படுங்கள்! தமிழுக்குத் தடை யாரிடமிருந்து வந்தாலும் — எவ்வகையில் வந்தாலும் — அத்தடையைத் தாக்க உறுதிகொள்ளுங்கள் !!

' உலகப் பொது நீதிநூலாம் திருக்குறளைப் படியுங்கள் ! கற்பதோடு மட்டுமன்றி நும் கருத்திற் கொள்ளுங்கள்!! அதன்படி செல்லுங்கள் !!!

*"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று சங்கே முழங்கு!"*

— புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

**சு. அறிவுக்கரசு,** *முன்னாள் மாணவன்.*

# காரைக்காட்டை நோக்கி...

*திட்டமும், புறப்பாடும்:*

ஜூலை மாதம் முதலிருவாரங்களில் நடைபெற்றக் கூட்டங்களிலே பாடி வாழ்க்கை நடத்துவதற்கென இங்கிருந்து சுமார் 3 மைல் தூரத்தில் உள்ள 'காரைக்காடு' என்னும் இடத்திற்குச் சென்று இரண்டு நாட்கள் தங்குவதென சாரணர்களாகிய நாங்கள் திட்டமிட்டோம். அதன்படி 26—7—'57 வெள்ளியன்று மாலை ஐந்துமணியளவில் சாரணர்கள் எல்லோரும் தூய தாவீது பள்ளியில் ஒன்று கூடினோம். அங்கு அணிவகுத்து சாரண ஆசிரியர்கள் துணையுடன் காரைக்காட்டை நோக்கிப் பயணமானோம். வழி நெடுகிலும் சாரணப் பாடல்களைப் பாடிக் கொண்டு மகிழ்வோடு சென்றோம். நாங்கள் காரைக்காட்டை அடையும்போது இரவி மறைந்து இருள் சூழ்ந்திருந்தது. வான வீதியிலே வண்ணத்தாரகைகள் எங்களை 'வாருங்கள்' என்று வரவேற்பதுபோல் வர்ண ஜாலங்கள் புரிந்தன.

*வரவேற்பும், இன்னமுதும்:*

சுமார் ஏழு மணியளவில் காரைக்காட்டிலுள்ள ஆரம்பப் பள்ளியை அடைந்தோம். அங்கே பள்ளி ஆசிரியர்களும் மாணவர்களும் எங்களை இன்முகம் காட்டி வரவேற்றனர். சிறிது நேரம் ஒய்வுபெற நாங்கள் அனைவரும் அமர்ந்து அளவளாவிக் கொண்டிருந்தோம். சுமார் 8-30 மணியளவில் நாங்கள் எடுத்து வந்த இரவு உணவினை பலருடன் பகிர்ந்து உண்டோம். பின் சிறிதுநேரம் சாரணப் பாடல்கள் பாடிவிட்டு அவரவரும் உறங்கச் சென்றோம்.

*பயிற்சியும், காலை சிற்றுண்டியும்:*

அடுத்த நாள் காலை 5 மணியளவில் ஆசிரியரின் ஊதலோசை எங்களை உறக்கத்தினின்று விழித்தெழச் செய்தது. இறை வணக்கத்திற்குப் பின்பு பள்ளியை அடுத்துக் காணும் திறந்த வெளியில் தேகப்பயிற்சி செய்தோம். காலையில் வீசிய குளிர்ந்த காற்று எங்கள் உள்ளத்திற்கும் உடலுக்கும் உற்சாக

மூட்டியது பயிற்சிக்குப் பின் காலைக் கடன்களை முடித்துக்-கொண்டு, சாரணீயக் கொடியேற்றி நாங்கள் பாடி வாழ்க்கை ஆரம்பிக்கப் போகிறோம் என்பதை அறிவிக்க ஒன்று கூடினோம். அவ்வமயம் சாரண ஆசிரியர்கள் எங்களை கொடிக்கம்பம் நடுவதற்கென்று தேர்ந்தெடுக்கப்பட்ட தென்னந் தோப்பிற்கு அழைத்துச் சென்றார்கள். அங்கு தேசீயக் கொடியையும் சாரணர் கொடியையும் ஏற்றுவதற்கென்று தனித்தனியே இரு கம்பங்கள் நட்டப் பின் கொடி வணக்கத்திற்கு தயாரானோம். நாங்கள் குழுவாரியாக அணிவகுத்து நின்றோம். எங்கள் சாரண ஆசிரியர் அவ்வூர் ஆசிரியர்களையும், மக்களையும் வரவேற்று பேசினார். பின் எங்கள் வேண்டுகோளுக்கிணங்க ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியரான திரு கோபால் பிள்ளை அவர்கள் சாரணக்கொடியை ஏற்றுவித்தார் உப தலைமையாசிரியர் திரு ராஜாப் பிள்ளை தேசீயக் கொடியை ஏற்றுவித்தார். அவர்கள் இருவரும் சாரணர்-களுக்குரிய அறிவுரைகளை வழங்கினார்கள். சாரண ஆசிரியரான திரு. இராமலிங்கம் அவர்கள் நன்றி கூறினார். நாங்கள் தேசீயக் கீதம்பாடி கொடியேற்று விழாவினை இனிது முடித்துக்கொண்டு தங்கியிருந்த பள்ளியை அடைந்தோம். காலைச் சிற்றுண்டி அருந்தியப் பின் சிறிது நேரம் இளைப்பாறினோம்.

*பாடலும், பாடமும்*

காலை சுமார் 10 மணியளவில் தென்னந்தோப்பை அடைந்தோம். அங்கு முதலில் சில சாரணீயப் பாடல்களைப் பயின்றோம். அப்போது அவ்வூர் பிரமுகர் ஒருவர் எங்கள் அனைவருக்கும் இளநீர் வழங்கினார். பின்பு புதிய மாணவர்களுக்கு (ஸ்கார்ப் கட்டாதவர்களுக்கு) சாரணீயப் பாடங்களை கற்றுக் கொடுக்க திரு. இராமலிங்கம் ஆசிரியர் அவர்கள் அழைத்துச் சென்றார். பழைய மாணவர்களுக்கு திரு. ஞானையா ஆசிரியர் அவர்கள் கழிகளின் உபயோகங்களைப்பற்றி விளக்கி காட்டினார். பின்பு எங்களுக்கு ஞாபக சக்திக்கான போட்டி ஒன்று நடை பெற்றது. போட்டி முடிந்தப் பின் நீச்சல் பயின்றோம். பின் மதியம் உணவருந்த இருப்பிடம் சென்றோம்

***வழியறியும் விளையாட்டும், வட்டத்தீ நிகழ்ச்சியும் :***

சுவையான மதிய உணவுக்குப் பின் அவரவர் நடத்த இருக்கும் நாடகங்களை ஒத்திகை செய்துக்கொண்டோம் மாலை

சுமார் 4 மணிக்கு ஆசிரியர் எங்களை இரு குழுவாகப் பிரித்தார். முதல் குழு தாங்கள் செல்லும் வழிகளில் குறியிட்டுச் சென்றது. இரண்டாவது குழு அவர்கள் எந்த வழியில் சென்றுர்கள் என்பதை குறிகளின் மூலம் கண்டறிந்தது. சுமார் 5 மணிக்கு விளையாட்டு முடிந்தப் பின் தென்னந்தோப்பை அடைந்தோம். அங்கு சிறிது நேரம் விளையாடினேம். பிறகு மாலைக் கொடி வணக்கம் செய்து விட்டு கொடியை இறக்கி எடுத்துக்கொண்டு பள்ளியை அடைந்தோம். இரவு சுமார் 8 மணிக்கு உணவு உட்கொண்ட பின் இரவு 'வட்டத்தீ நிகழ்ச்சிகளை' (Camp fire) நடத்திப் பார்த்தோம் சுமார் 9 மணியளவில் காரைக்காடு ஆரம்பப் பள்ளி தலைமை ஆசிரியர் தலைமை தாங்க, அவ்வூர் பிரமுகரான உயர்திரு அங்கமுத்து படையாச்சி முன்னிலையில் எங்கள் நிகழ்ச்சிகளை நடத்திக் காண்பித்தோம். அங்கு குழுமி யிருந்த மக்கள், அந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் மிகவும் ரசித்தனர். அவற்றுள் மந்திரவாதி, A. B. C. D. நகைச்சுவை நிகழ்ச்சிகள் குறிப்பிடத் தக்கவை. சுமார் 11-30 மணியளவில் நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. அங்கு நாங்கள் பாடி வாழ்க்கையை நடத்த ஆதரவு தந்த பெரியோர்களுக்கு நன்றி கூறியப் பின் உறங்கச் சென்றேம்

***கால்நடைப் போட்டியும், ஊர்பிரமுகர்களின் பார்வையும்:***

முன் தினத்தைப் போல காலையில் எழுந்து இறை வணக்கம் முடிந்தப் பின் உடற்பயிற்சிகளை முடித்துக் கொண்டதும் ஆசிரியர்கள் கால் நடைப் போட்டியை ஆரம்பித்தனர். அது முடிவுற்றுப் பின்னர் காலைக்கடன்களை முடித்துக்கொண்டு காலைச் சிற்றுண்டியை உட்கொண்டோம். பிறகு தென்னந்தோப்பில் கொடி வணக்கம் செய்தோம். ஆசிரியர் ஒவ்வொரு குழுவிற்கும் தனித்தனியே இடங்கள் அமைத்துக் கொடுத்தார் அவரவரும் தங்களுக்குக் கொடுக்கப் பட்ட இடத்தை அழகாக துப்புரவு செய்தோம் அப்போது ஊர்ப் பிரமுகர்கள் எங்களைப் பார்வையிட வந்தனர் அவர்களைச் சாரண ஆசிரியர்கள் வரவேற்று ஒவ்வொரு குழுவினரையும் அறிமுகம் செய்வித்தார்கள். பின் அவர்கள் சென்றதும் சாரணீயப் பாடங்களை சிறிது நேரம் பயின்றேம். தேகப்பயிற்சி

நடைபெற்றது. அப்போது ஆசிரியர்கள் எங்களுக்குக் கழியுடன் செய்யும் பயிற்சிகளை கற்பித்தார்கள். இதற்குள் மணி 12 ஆகிவிடவே நாங்கள் மதிய உணவை நாடிச் சென்றோம்.

***விடைபெறுதலும், வீடடைதலும் :***

சுவைமிக்க மதிய உணவிற்குப் பின் இளைப்பாறிவிட்டு வீட்டிற்கு புறப்படத் தயாரானோம். அப்போது அவ்வூர் பிரமுகர் ஒருவர் எங்கள் எல்லோருக்கும் உயர்ரக மாம்பழங்கள் கொடுத்தார். பின்பு அவ்வூர் ஆதாரப்பள்ளி ஆசிரியர்களிடமும், நாட்டாண்மைக்காரரிடமும் விடைபெற்றுக் கொண்டு சுமார் 4 மணியளவில் காரைக்காட்டிலிருந்து புறப்பட்டு கால்நடையாக 5-30 மணியளவில் கடலூர் முதுநகரை அடைந்தோம். பின்பு ஆசிரியர்களிடம் விடைபெற்றுக் கொண்டு அவரவரும் வீட்டிற்குச் சென்றோம். இப்படி வாழ்க்கையிலிருந்து நாங்கள் கற்றறிந்த விஷயம் என்னவென்றால், "சாலச் சிறந்தது சாரண வாழ்க்கை என்பதாம்

**வாழ்க சாரணர் !** வளர்க சாரணீயம்!!

இங்ஙனம்.

***சே. வி. நிக்கோலாஸ் (சாரணன்)***
*காந்தி அணித்தலைவன்,*
*ஆறும் படிவம்.*

●

*முனிசிபல் அதிகாரி :— உங்கள் வீட்டில் எத்தனை பேர்கள் இருக்கிறீர்கள் ?*

*வீட்டுக்கார அம்மாள் :— என் கணவர், நான், மூத்த பையன், 2 பெண்கள், 1½-வயது பெண், 1 கைக்குழந்தை யாவரும் இருக்கின்றோம். அய்யய்யோ ! மறந்துவிட்டேனே ! இன்னும் நாய், பூனை, காக்கை, குருவி, கரப்பான் பூச்சி, பல்லி, தேள் யாவரும் தற்சமயம் இருக்கிறோம்.*

D. WILLIAM, III Form B.

# " கடமையும் பாசமும் "

[வரலாற்று நாடகம்]

## *காட்சி — 1*

*[இடம் : விசய நகரக் கிருஷ்ணதேவராயர் அவைக்களம்]*

பணியாள் : அரசே ! யாரோ சுந்தரகுமாரராம் பாண்டியன் சந்திரசேகரின் மைந்தராம். தங்களைக் காண வந்ததாகக் கூறுகிறார். வாயிலில் இருக்கிறார்.

கி. தே. : அப்படியா, உடனே வரச்சொல்.

சுந்தரகுமாரர் : வணக்கம், மன்னர் மன்னா !

கி. தே. : வருக ! வருக !! வீரபாண்டியன் மைந்தா, அந்த ஆசனத்தில் அமர். வந்த செய்தி யாதோ ?

சு. கு. : (அமர்ந்து) மன்னர் மன்னா ! என் நிலைமை சொல்லி முடியாத துக்கத்தில் இருக்கிறது. சோழன் வீரசேகரன் என் தந்தையுடன் போரிட்டுக் கவர்ந்துகொண்ட நாட்டை மீட்டுக் கொடுக்கத் தாங்கள் பணித்த தட்சிண மண்டலாதிபதி கொட்டியம் நாகமநாயகர் சோழனிடமிருந்து மீட்ட எங்கள் நாட்டை என் தந்தையிடம் ஒப்புவிக்காமல் தானே நேரடியாக அதிகாரஞ் செலுத்தி ஆட்சி செய்கிறார். இதே துக்கத்தால் என் தந்தை இறந்துபோனார். தலைமுறை தலைமுறையாக வந்த அரசுரிமை என் தந்தையோடு முடிந்து நான் பரதேசிபோல் ஆவதோ ? தாங்கள்தான் தயவுகூர்ந்து எனக்கு இராச்சியத்தை வாங்கித் தந்தருளவேண்டும். கருணை காட்டுங்கள் வேந்தர் வேந்தே.

கி. தே. : என்ன ? என் ஆணையையா மீறினான் நாகமநாயகன் ? அமைச்சரே, உடனே ஓலையனுப்பும் நாகமனுக்கு என் ஆக்கினையை மீறியதன் காரணம் தெரிவிக்கச் சொல்லும். சுந்தரகுமார் கவலைப்படாதே நீ விரும்பியபடியே செய்கிறேன். பதில் வரும்வரை இங்கேயே தங்கி இரு.

சு. கு : நன்றி, அரசே.

## காட்சி — 2

[இடம் : பாண்டியநாட்டில் நாகமநாயகன் அவைக்களம்]

பணியாள் : அரசே ! நரபதியிடம் இருந்து கடிதம் வந்திருக்கிறது.

நா. நா. : (வாங்கி வாய்க்குட் படித்தல்) இராமபத்திரா, மகாராயர் கடுங்கோபத்துடன் எழுதி இருக்கிருர் பாண்டிய நாட்டை நாம் நேரடி ஆளுகையில் எடுத்துக்கொண்டதுபற்றி நிலைமையை விளக்கி உடனடியாக ஒரு கடிதம் அவருக்கு அனுப்பவேண்டும்.

அவையில் ஓர் ஆலோசகர் : அரசே ஒரு விண்ணப்பம் மன்னர்பெருமான் கடுங்கோபத்துடன் எழுதியிருப்பதாக கூறினீர்கள். கடிதம் எழுதுவதோடுகூட நிலைமையை நேரில் விளக்க உங்கள் நண்பர் இராமபத்திரரே சென்ருலும் நலமாய் இருக்கும் என்று எண்ணுகிறேன்.

நா. நா : உண்மைதான் பெரியவரே. அப்படியே செய்வோம். இராமபத்திரா இதற்குத்தான் உன்னைப்போன்ற உற்ற நண்பர் வேண்டும் என்பது. இராமபத்திரரே ! நீ போய் சந்திரசேகரரின் திறமைக் குறைவையும் அதனல் பாண்டிய மண்டலத்தின் நெருக்கடியைச் சமாளிக்கக் குடிகளின் நன்மையை நாடியே நாட்டை அவரிடம் கொடாமல் நாமே நேரில் ஆளுகைக்கு எடுத்துக்கொண்டதையும் மன்னர் பெருமானுக்கு தெளிவாய் விளக்கிச் சொல்.

## காட்சி — 3

[இடம் : பாண்டியநாட்டு நாகமநாயகன் அவைக்களம்]

நா நா. : இராமபத்திரா, சென்ற காரியம் என்ன வாயிற்று ? மன்னர்பெருமான் என்ன சொன்ஞர் ?

இராம : நாகமரே, நான் எல்லாம் விளக்கிச்சொன்னேன் அரசர் தங்கள் கடிதமும் பார்த்தார் இருந்தாலும் ஆட்சியை நேரடியாக தாங்கள் எடுத்துக்கொள்ளாமல் பாண்டியனிடம்

ஒப்படைத்துவிட்டு அவனுக்கு உதவியாக இருந்து வேண்டியதைச் செய்திருக்கலாம் என்று சொன்னார். போனது போகட்டும் என்று இப்போது உடனே ஆட்சியை சந்திரசேகரின் மகன் சுந்தரகுமாரரிடம் ஒப்படைக்குமாறு சொல்லச்சொன்னார். இதோ! கடிதம்!

நா. நா. : (கடிதம் பெற்று மனதுட் படித்தல்) அரசருக்குப் பயித்தியமா என்ன? நிலைமையை நேரில் பார்க்காததால் நாம் எவ்வளவு விளக்கியும் அவர் தெரிந்துகொள்ளவில்லை. இப்போது சுந்தரபாண்டியனிடம் ஆட்சியை ஒப்படைத்தால் நாட்டில் மீண்டும் அராஜகம் தலைவிரித்தாடும். வருவது வரட்டும் குடியோம்புதலே எனது முக்கிய கடன்.

## காட்சி — 4

[இடம் : கிருஷ்ணதேவராயர் அரசவை]

கி. தே. : அமைச்சரே, நம் கட்டளையை ஏற்று நாகமன் பதில் ஏதாவது அனுப்பி இருக்கிறானா?

அமை : இல்லை அரசே. தன்னிடம் இராச்சியத்தை தர மறுத்துவிட்டதாக சுந்தரபாண்டியனிடமிருந்து கடிதம் வந்து இருக்கிறது.

கி. தே : என்ன ஆணவம்? அந்த அநீதிக்கார இராச துரோகிக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டும் வீரர்களே, அந்த அக்கிரமக்காரனை அடக்கி அவன் சிரசை என் பாத காணிக்கையாகக் கொண்டுவரும் வேலைக்கு யார் தலைமைபூண்டு படை செலுத்துகிறீர்கள்...... என்ன பதிலில்லையா? அவ்வளவு கோழைகளா நீங்கள்? இருக்கட்டும் இன்று மாலை வரை உங்களுக்கு அவகாசம் கொடுக்கிறேன். அதற்குள் எவரேனும் துணிந்து படைசெலுத்த முன்வாருங்கள் இல்லை என்றால் நானே புறப்படுகிறேன்.

## காட்சி — 5

[இடம் : வீதி]

வீரப்பன் : என்ன நல்லப்பா? நம் நாகமநாயகர் ஏன் இப்படிச் செய்யவேண்டும்? அரசர் எவ்வளவு கோபமாய் இருக்கார் பார்! ஆமாம், நீதான் படை செலுத்தேன்.

நல்லப்பன் : நானு ? என்னப்பா உனக்கு எப்படி இருக்கிறது என்னைப் பார்த்தால் ? நாகமர் வீரம் என்ன ? அவருக்குச் சமமாக யார் இருக்கிறார் ? நான்போய் அவருக்கு எதிராகப் ப்படை எடுக்கிறதா ? இன்னும் போதாக் குறைக்கு அதே நாகமர் பிள்ளை விசுவம் இங்கேதானே இருக்கிறார் ? அவரைவிடவா நான் வீரன் ? விசுவம் என்றால் நம் அரசருக்கு கண்மணிபோலல்லவா ? அரசர் சண்டைக்குப் போய் கலிங்கத்து அரசரையும் இராயச்சூர் முகமதியரையும் ஜெயித்தபோதெல்லாம் உடன் இருந்து போர் எடுத்த ஆள் விசுவம். அவர் அப்பாவிடம் சண்டைபோட நான் • படை நடத்துகிறதா ? முடியவே, முடியாது.

வீரப்பன் : அப்படி யாரும் முன்வராவிடில் அரசரே கிளம்ப நாம் எல்லோரும் உடன் போக வேண்டிவரும். ஆமாம்! நமது விசுவம் என்ன செய்வாரென்று தெரியவில்லை ? சொந்த அப்பாவுக்கு எதிராக அவர் எ ப் ப டி அண்ணே சண்டை போடமுடியும்.

நல்லப்பன் : சரி, சரி எது எப்படியானாலும் போகப் போக பார்ப்போம். நான் வருகிறேன்.

## *காட்சி — 6*

*[இடம் கிருஷ்ணதேவராயர் அரசவை]*

கி. தே : என்ன ? யாரேனும் முடிவுக்கு வந்தீர்களா ?

விசுவநாதர் : பேரரசே. அவர் என் தந்தையே; நான் அவர் ஒரே மகனே, ஆனாலும் என்ன ? அரச சேவையில் தந்தை மகன் என்ற கண்ணோட்டம் ஏது ? அடியேனுக்குக் கட்டளையிட்டால் நானே சென்று, இப்பணியை செய்து வருகிறேன்.

*[மன்னர் உட்படச்சபையில் அனைவரும் திகைத்து அமைதி நிலவுதல்]*

விசுவ : என்ன இவ்விஷயத்தில் சந்தேகிப்பது இயல்பானாலும் அப்படிச் சந்தேகிக்க வேண்டாம் முழுதும் நம்பலாம். நான் ஒரு நாளும் மோசஞ் செய்யமாட்டேன்.

கி. தே : சரி, அப்படியே செய் விசுவா உன் தந்தை இப்படி நடப்பாரென்று நான் கனவிலும் நினைக்கவில்லை. கெடு காலத்து கெடுமதியே இது. அவர் துரோகத்தைக் கண்ட பின்னும் உன்னிடம் எனக்கு முழு நம்பிக்கையே. நீயே இப்பணிமீது செல். அரச துரோகியாயினும், அவர் உன் தந்தை யாதலில், முதலில் ஆணையிட்டபடி அவர் தலையைக்கொண்டுவர வேண்டாம். அவரை கைது செய்து அழைத்துவா.

### *காட்சி — 7*

*[தனியிடம்]*

அமைச்சர் : ஆமாம் அரசே! விசுவநாதனை நம்பலாமா? அவன் தங்களிடம் உரைத்ததெல்லாம் நடிப்பாக இருந்து தந்தை யோடு சேர்த்துக்கொண்டு நம்மை எதிர்த்தால்?

கி. தே : எனக்குக்கூட முதலில் மனம் சமாதானப்பட வில்லை அமைச்சரே. அப்படி ஏதாவது அசம்பாவிதம் நடக்கா திருக்கவும் ஓர் ஏற்பாடு செய்து இருக்கிறேன். விசுவநாதனுடன் அவன் உற்ற நண்பன் அரிய நாதத்தையும் அனுப்புகிறேன் அரியநாதன் பாண்டி நாட்டு வளப்பமும் குடிகளின் பழக்க வழக்கமும் அறிந்தவன். விசுவநாதனுக்கு அரியநாதன் எவ்வகை யிலும் தாழ்ந்தவனல்லன். ஒரு படிமேலானவன் என்று கூடக் கூறலாம். நாகமநாயகனின் ஒரே மகன் ஆயிற்றே விசுவநாதன் என்று சந்தேகங்கொண்டாலும் அரியநாதத்திடம் அவநம்பிக்கை கொள்ள இடமே இல்லை. அதனால்தான் பாலுக்கும் காவல் பூனைக்கும் தோழன் என்பதுபோல் அரியநாதத்தையும் உடன் அனுப்பி இருக்கிறேன் மதுரைக்கு. அதனால் அச்சங்கொள்ள வேண்டியதில்லை அமைச்சரே

### *காட்சி — 8*

*[இடம் : மதுரை]*

*[தந்தைக்கும் மகனுக்கும் இருதிறத்திலும் படைகளுடன் போர். போரின் ஒலி மும்மரமாக இருக்கிறது............ தோற்ற தந்தையை மைந்தன் விலங்கிட்டு கொண்டுவரும் காட்சி]*

விசுவ : (விலங்கிடப்பட்ட தந்தைமுன் மண்டியிட்டுக் கண்ணீருடன்) அப்பா ! அரசருக்கு என்னுடைய கடமையை ஆற்றும் பொருட்டு நான் செய்ததை மன்னித்தருளுக !

நா நா : விசுவா, எழுந்திரு. உன் கடமையை நீ செய்தாய். தந்தையின் வீரத்திற்குந் தனயனின் வீரம் தாழ்ந்த தல்ல என நிரூபித்து விட்டாய். புலியின் வயிற்றில் பூனை பிறக்குமா ! குடிகளைக் காக்கும் பொருட்டு நான் அரசரின் ஆணையையும் மீற நேரிட்டது எல்லாம் வினைப்பயன். இனி நடக்க வேண்டியதைச் செய். மனங்கலங்க வேண்டாம்.

## *காட்சி — 9*

*[இடம் : கிருஷ்ணதேவராயர் அரசவை-*
*விலங்கிட்டு நாகமநாயகரை கொண்டு வருதல்]*

விசுவ : அரசே, என் கடமையைச் செய்து முடித்தேன். சுந்தரக் குமாரன் கையில் ஆட்சியையும் ஒப்படைத்தேன் தாங்கள் விரும்பியபடி பாண்டிநாட்டின் நிலைமையைக் கண்டு அரியநாதமும் நானும் குறித்த அறிக்கையை அரியநாதம் தங்களிடம் சமர்ப்பிப்பார்.

கி. தே : மெச்சுகிறேன் விசுவா, உன் இராச பக்தியையும், வீரத்தையும் மகிழ்ச்சி நாகமரே, உமது மைந்தனின் நேர்மைக்காகவும் உங்கள் இருவரின் நெடுங்கால ஊழியத்திற் காகவும் உம்மை மன்னித்து விடுதலை செய்கிறேன்.

நா. நா : நன்றி அரசே (வணங்குதல்)

## *காட்சி — 10*

*[இடம் : கிருஷ்ணதேவராயர் அரசவை]*

கி: தே : சபையோர்களே ! பாண்டி மண்டல நிலைமையை நாம் அறிந்தோம். அரியநாதம் விசுவம் அறிக்கையிலும் நாகமன் முன்பு தெரிவித்ததுபோலவே பாண்டி மண்டலத்தில் நிலைமை குறிக்கப்பட்டிருக்கிறது. சுந்தரப் பாண்டியன் எப்படி ஆட்சி செய்திருக்கிருனே தெரியவில்லை. அந்நாட்டின் பரிபாலனத்திற்குத் துணைசெய்ய நாகமநாயகர், அரியநாதம்




'உள்ளங்கவர் ஓடை'

CONNEMARA PUBLIC LIBRARY
8 - NOV 1961
MADRAS




'எழிலும் நிழலும்'

CONNEMARA
MADRAS

விசுவநாதம் இவர்களில் யாராவது ஒருவரை அனுப்பலாமென அமைச்சர் கூறுகிருர். பாண்டி நாட்டுக் குடிகளின் நன்மையை உத்தேசித்து நாம் ஆட்சியின்மேல் ஏதாவது முடிவுக்கு வரவேண்டும்.

*[பணியாள் ஒருவன் சபையில் ஓலையைக் கொண்டுவருதல்]*

பணியாள் : அரசே பாண்டி நாட்டிலிருந்து ஓர் தூதுவன் ஓலைக் கொண்டு வந்திருக்கிருன்.

அமைச்சர் : (வாங்கிப் படித்தல்) மன்னர் பெருமன்னு! வணக்கம். எங்கள் அரசர் சுந்தரகுமாரர் நோய்வாய்ப்பட்-டிருந்து நேற்று இயற்கை எய்தியதை வருத்தத்துடன் தெரிவிக்கிருேம். மேற்கொண்டு நாட்டின் நிர்வாகத்திற்குத் தங்கள் ஆணையை எதிர்பார்த்திருக்கிருேம். வணக்கம்.

அமைச்சன்,
***அம்பலவாணன்***

கி தே : துக்கச் செய்திதான். இப்போது எடுத்துக் கொண்ட பொருளை ஒட்டியதாயும் இருக்கிறது. நிலைமை மேலும் சிச்கலாகி இருக்கிறது.

அமை : சுந்தரப் பாண்டியனுக்குப்பின் அவன் சந்ததியே கிடையாது வேந்தே. முன்பு முகமதியருக்குப் பயந்து மதுரையை விட்டு ஓடித் தென் காசியில் ஆட்சி செய்துவரும் பாண்டிய பரம்பரை ஒன்று இருக்கிறது.

கி. தே : அப்படிக் கிளை வமிசத்திலிருந்து வாரிசு கொண்டு வந்து ஒருவருக்கு முடிசூட்டுவதைவிட விசுவநாதமும், அரியநாதமுமே பாண்டிய நாட்டு அதிபதி இராணுவத்தை பார்க்கும் சேனுதிபதி, மற்றெல்லாக் காரியங்களைக் கவனிக்கும் பிரதானி என்று இதுகாறும் இருந்ததுபோல் இரண்டு அதிகாரிகளாய் இல்லாமல், விசுவநாதத்திற்கு எல்லாக் காரியங்களிலும் உடன் இருப்பவராக தளவாய் என்ற புதிய பதவியில் அரியநாதத்தை மட்டுமே அமர்த்துகிருேம்.

என்ன சபையோர்களே? இதற்குமாருக நீங்கள் ஏதாவது தெரிவிக்க வேண்டியதுண்டா?

சபையோர் : இல்லை, இல்லை ! அதுவே சரியான ஏற்பாடு

இ. தே : சரி, இத்துடன் சபை கலையட்டும்

சேவகன் : மன்னர் ! மன்னர் !!

சபையோர் : வாழ்க !

சே : பாண்டிய ராஜா விசுவநாதநாயகர் !

சபை : வாழ்க !

சே : தளவாய் அரியநாத முதலியார் !

சபை : வாழ்க!

சே : விசய நகர சாம்ராஜ்யப் பேரரசர் !

சபை : வாழ்க !

*திரை*

***மா. குபேந்திரன்,***
*பள்ளி மாணவத் தலைவன்.*

போன் நெம்பர் **15**

**க்ளைவ் தெருவில் உள்ள**

# மரவாடியில்

❊ *கட்டிட வேலைகளுக்குத் தேவையான மரம்,* ❊
❊ *சயிஸ்கள், பலகை, பட்டை, ஓடு* ❊
❊ *முதலிய சரக்குகள் குறைந்த* ❊
❊ *விலையில் கிடைக்கும்* ❊

❊

# எஸ். கே. பிரதர்ஸ்,

**மர வியாபாரம்,** **கூடலூர் O. T.**

# ஆல் இந்தியா ரேடியோ திருச்சிராப்பள்ளி

## சிறுகாப்பியங்கள் சூளாமணி

## (18—11—1952) — மாலை 2-15

நம்செந்தமிழ் மொழியில் உள்ள காப்பியங்கள் பெருங்காப்பியம் சிறுகாப்பியம் என இரு வகைப்படும். சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி, ஆம் இவை ஐந்தும் பெருங் காப்பியமாகும். சூளாமணி, யசோதரகாவியம், நாககுமாரகாவியம், உதையணன் கதை, நீலகேசி இவை ஐந்தும் சிறுகாப்பியமாகும். இவற் றுள் சூளாமணி என்ற காவியத்தை தோலாமொழித்தேவர் இயற்றினர். இந்நூல் சைன மதத்தை அடிப்படையாகக் கொண்டது. கி. பி. 6 ஆம் நூற்றுண்டிற்குட்பட்டது எனவும் 10ஆம் நூற்றுண்டிற்குப் பிற்பட்டது எனவும் இந்நூற்காலத்தை ஆய்வோர் கூறுவர். இந்நூல் பாயிரம் நீங்கலாக 12 சருக்கங்களைக் கொண்டது. 2131 செய்யுட்களையுடையது. இதன் முதல் நூல் ஆருகதமாபுராணமெனத் தெரிகிறது. நெடுஞ்சேந்தன் என்ற வேந்தன் அவையில் அரங்கேற்றப் பட்டது. அருகதேவனை வணங்கும் இம் மண்ணுலக மன்னன் ஒருவன், விஞ்சையர் மகளை தன் மகனுக்கு மணம் செய்து வைத்து, முடிசூட்டிவிட்டு தான் துறவு பூண்டு முத்திபெற்ற வரலாற்றைக் கூறுகிறது. இந்நூலின் பெயர் ஈரிடங்களில் காணப்படுகிறது. அது ஒரு சிறப்பாகும் இந்நூற்கு.

முன்னொளில் சிரேய சுவாமி தீர்த்தர் காலத்தில் சுரமை நாடு என்றொரு நாடிருந்தது. அது நானிலவளனும் உண்டயது. அந்நாட்டு மக்கள் முருகனைப்போற்றினர். ஆகாத்தோம்பினர். கலை வளாத்தனா கடல் வாணிபம் செய்தனர். பரதவர் பிள்ளைகள் தாய் மடியில் விளை-யாடுவதை மறந்து, கடலம்மையின் குழந்தைகளாய் நீந்தியும் மூழ்கியும் அலையில் தவழ்ந்தும் விளையாடினர். தங்கள் அணிகலன்களை வீசி யெறிந்து பின் நீரில் மூழ்கி எடுத்து பிறர்க்குக் காட்டி மகிழ்ந்தனர். இத்தகைய நாட்டில் போதனமா நகரம் என்றொரு நகரம் இருந்தது. அந் நகரம் அழகு மிக்கது. அதனை ஆசிரியர் உருவகஞ் செய்யுந்திறம் வியத்தற்குரியதாகும். கடல் ஒரு பொய்கை. அதில் இந்த உலகம் ஒரு தாமரைமலர். அப்பூவின் நடுவில் உள்ள இனிய பொகுட்டுதான் சுரமை நாடு. அப்பொகுட்டில் அமர்ந்துள்ள இலக்குமிதான் போதனமா நகரம். எனவே இலக்குமியே அவதரித்தாற்

போல் போதனம் விளங்குகிறது என்றால் அதன் அழகையும் பொருட் சிறப்பையும் என்னென்றுரைப்பது? இந்நகரப் பெண்கள் தம் காலிற்கு செம்பஞ்சுக் குழம் பூட்டியிருக்கிறார்கள். அதன் ஈரம் இன்னும் உலரவில்லை. அத்துடன் அவர்கள் வீதியில் நடக்கிறார்கள். நடந்த இடமெங்கும் தாமரைமலர் போலும் சுவடுகள் காணப்படுகின்றன. அவை நீரிடை மலரும் தாமரை நிலத்திடை மலர்ந்ததுபோல் காணப்படுகின்றன. என்ன அழகான வருணனை. இக் கருத்தை மேரு மந்திர புராணம் பாடிய வாமன் முனிவர் "மலர்க்கண் வஞ்சியங் கொம்பென இன்சொலார், அலத்தகஞ் செறிந்தஞ் சிலம்பாரடி, தலத் தெழுந்த செந்தாமரைப்போதுபோல், நிலத்தகம் பொருந்திக் கிடந்தவே" என்ற செய்யுளில் பெய்து வைத்துள்ளார். எனவே இத்தகைய நகரில் உலகிற்கு உயிரென விளங்கிய பயாபதி என்ற மன்னன் இலக்குமியினும் அழகு மிக்க மிருகாவதி, சசி என்ற இரு மனைவியருடன் ஆட்சி செய்து வந்தான். மக்களிடம் ஆறில் ஒன்று பெற்றான். அந்தணரைப் புறந்தான். பகைவரை வென்று அருளாட்சி செய்தான். அவன் மனைவியர் இருவரும் அவனுளத்தில் ஒருவராய்த் திகழ்ந்தனர். கண்ணன் பல மகளிடத்தும் ஒத்த அன்பு காட்டியதுபோல் இவனும் மனைவியரிடத்து ஒத்த அன்பு காட்டினான். அவ்விதமே உயிர்களிடத்தும் விளங்கினான். மிருகாவதி பலராமனை ஒத்த மகனைப் பெற்றெடுத்தாள். அவனே விசயனவான். சசி என்ற இளைய மனைவி காயாம்பூ வண்ணனான கண்ணனைப்போன்ற அழகு மிக்க திவிட்டன் என்பவனை ஈன்றெடுத்தாள். இருவரும் வளர்பிறையென வளர்ந்தனர். கலை பயின்றனர். படைப் பயிற்சியும் உற்றனர். ஒருநாள் பயாபதி தன் மக்களுடன் அரியணையில் அமர்ந்திருந்தபோது, சோதிடன் ஒருவன் வந்து மன்னனை வணங்கினான். பின் மன்னன் கண்ட கனவினையும் அதன் பயனையும் அதன் தொடர்பாக இன்னும் 7 நாளில் ஒரு தூதன் ஓலையுடன் வருவான் என்பதையும் கூறினான். இது நிற்க

மேரு மலைக்குத் தென்பகுதியில் சேடி என்றொரு நாடு உண்டு. அதன் தலைநகர் இரதநூபுரச்சக்கரவாளம் என்பதாகும். இங்கு சுவலனசடி என்ற வித்தியாதர மன்னன் ஆண்டு வந்தான். அவன் அறிவு ஆற்றல் அருள் ஆமிவை அமைந்தவன். கடுஞ் சொல்லறியான். காட்சிக்கெளியன் மெய்யுள்ளம் கொண்டவன். பயாபதியினும் மிக்க பண்புடையவன். அவன் ஆட்சியில் கொடிகள் காற்றால் நடுங்குமேயன்றி (அதாவது அசையுமேயன்றி) வேறு எவ்வுயிரும் பயத்தால் நடுங்கிய-

தில்லை. இவன் மனைவிதான் வாயுவேகை என்பவள். அழகில் மலர் மங்கையே அவள். மன்னற்கு உயிராகவும் அணங்காகவும் அமிழ்தமாகவும் விருந்தாகவும் விளங்கினாள். இவ்விருவர்க்கும் அருக்க கீர்த்தி, சுயம் பிரபை என்ற ஆண் பெண் இருவர் தோன்றினர். அவர்கள் வளர்பிறை மதியென வளர்ந்தார்கள். கசடறக் கற்றார்கள். சுயம்பிரபை அழகு மிகுந்து காணப்படுகிறாள். அவள் நடக்கும்போது, வண்டுகள் தாமரைப்போதில் தேனுண்ண அமர்வதும் பின் எழுவதும்போல அவள் முகத் தாமரையில் கருத்துச் சுருண்ட மயிர் முடி காற்றில் அசைந்து அசைந்து படிந்தது. இக் கருத்தை யசோதை கண்ணனைப் பார்த்துப் "பூவில் தேன் உண்ணும் வண்டேபோல், பங்கிகள் வந்துன் பவளவாய் மொய்ப்ப" என்று கூறியதாக பெரியாழ்வாரும் கூறினார். இங்ஙனம் பெண்மை நலம் கனிய மணப்பருவம் எய்தினாள் சுயம் பிரபை. வேனிற் காலமும் வந்தது. அரசனும் தன் மனைவி மக்களுடன் மனோவனம் என்ற வனம் அடைந்து சோலைக் காட்சிகளைக் கண்டு களித்தான். பின் அங்குள்ள அருகதேவனை வணங்கி அருள் வேண்டி நிற்கையில் அவண வந்த சாரணர் இருவர் பிறவியின் நிலையையும் அருகதேவன் உணர்த்திய அறங்களையும் உணர்த்தினார்கள். பின் சடியரசன் தன் அரண்மனை அடைந்து சுயம்பிரபையின் மணவினைக் குறித்து அமைச்சருடன் ஆராய்கிறான்.

முதலில் சுச்சுதன் என்ற அமைச்சன் இரத்தின பல்லவத்தரசனாகிய அச்சுவகண்டன் தக்கவன் எனக் கூறுகிறான். பின் பல அமைச்சர்களும், தத் தமக்குத் தெரிந்தவர்களைக்கூற, மன்னன் தெளிவடையாது, சதவிந்து என்ற சோதிடனைக்கண்டு தன் பெண்ணிற்கு கணவனாகத் தக்கவன் யார் என வினவினான். அச்சோதிடன் போதன நகரத்தரசன் மகன் திவிட்டனே சுயம்பிரபைக் குரியவன். அவன் கண்ணனை நிகர்த்தவன் சங்கு சக்கரரேகை அவன் கையிலிருக்கிறது. சிங்கத்தை வெல்லக்கூடியவன் என அவன் சிறப்புக்களையும் கூறினான். பின் சடியரசன் பயாபதிக்கு மரீசி என்பானை மணவினைக்காக தூது அனுப்பினான். அவனும் தூதுரைத்துத் திரும்பினான். வந்த மரீசியும் திவிட்டனே சுயம்பிரபைக்குத் தக்கவன் என்றான். கேட்ட சடியரசன் மகிழ்ச்சி மிக்கவனாய் திவிட்டன் சிங்கத்தை வெல்வதை அறிய வேண்டி, ஒற்றனொருவனை அனுப்பி வைத்தான்.

இந்நிலையில் இரத்தின பல்லவத்தில் அச்சுவகண்டன் காமக் கள்ளுண்டு ஆடல் பாடலில் ஈடுபட்டு ஆட்சியைக் கவனியாதிருந்தான்.

சதவிந்து என்பான் அங்ஙனம் இருப்பது ஆகாது என பல நீதிகளைக் கூறி மேலும் "அரசர் தாம் மகிழ்ச்சியினால் இறுமாப்பு கொள்ளும் போது, அங்ஙனம் இறுமாந்து ஆட்சியைக் கவனியாது கெட்டுப் போனவர்களை நினைக்கவேண்டும் என புகழ்ச்சி நூலாகிய திருக்குறளும் கூறுகிறதே என்றான். அக் கருத்துள செய்யுள்தான் இது:

"இகழ்ச்சியிற் கெடுவார்களை எண்ணுக
மகிழ்ச்சியில் மதிமைந்துறும் போழ்தெனப்
புகழ்ச்சிநூலுள் புகன்றனர், பூவினுள்
திகழ்ச்சிசெல் பொன்மணிமுடி மன்னனே"

என்பதாகும். மேலும் சதவிந்து அமமன்னனுக்குப் பகைவனாயுள்ளவன் பயாபதியின் மகன் திவிட்டனே எனபதையும் கூறினான். கேட்ட அச்சுவகண்டன் அவன் மொழிகளைப் பொருட்படுத்தாது, பயாபதியிடம் திறைவேண்டி தூது அனுப்பினான். இதனை அறிந்த பயாபதி கோபங் கொண்டான். கோபங்கொண்டு என்செய்வது? அடிமை வாழ்வை எண்ணி ஏங்கினான் இதற்குக் காரணம் வினைப்பயனே எனத் தெளிந்து, பின் திறை அளித்தனுப்ப திவிட்டன் அதனை அறிந்து தடுத்தான். இதனை அறிந்த அரிமஞ்சு அரிகேது என்பவனை மாயச்சிங்கமாகச் சென்று போதன நகரத்தை துன்புறுத்துமாறு ஏவினான். அப்படியே சென்ற சிங்கத்தைத் திவிட்டன் தன் அண்ணனுடன் சென்று துரத்த திடீரென உண்மைச் சிங்கமொன்று வரவும், அதன்மீது பாய்ந்து கொன்றான். கண்டோர் வியந்தனர். பின் இருவரும் நகர் திரும்பி நிகழ்ச்சியை தந்தைக்கு உரைத்தனர்.

திவிட்டன் சிஙகத்தை வென்ற செய்தியை அறிந்த சடியரசன் திருமண ஏற்பாட்டோடு தன் மக்களுடன் படைகள் புடைசூழ போதனம் வந்தான். அஙகு பயாபதியும் சிறப்பாக இவர்களை வர வேற்றான். திவிட்டன் அவர்கள் தஙகியிருந்த பொழில் வளஙகாணச சென்றபோது சுயம்பிரபையானவள் திவிட்டனைக கண்டு அவனழகில் ஈடுபட்டாள். இந் நம்பியைக்காண ஆயிரம் நயனம் வேண்டும் என எண்ணி வியந்தாள். உண்மைக்காதல் ஏற்பட்டது காதலுக்குத் தடை ஏது? அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்? நீர் வெள்ளம் மிக்க போது அதனைத் தடுக்க அணையுமுண்டோ? இல்லை. "சிறையு முண்டோ செழும்புனல் மிக்குழி, நிறையும் உண்டோ காமம் காழ்க் கொளின்" என்றது மணிமேகலையும் இந்நிலையில் சுயம்பிரபையின் உள்ளத்தை நம் தோலாமொழித் தேவர்

"சிறை என்பது இல்லைச் செவ்வே செம்புனல் பெருகுமாயின்
நிறை என்பது இல்லைக் காமம் நேர்நின்று சிறக்குமாயின்
இறை நின்றது உளது என்பார் சென்று அரும்பெறல் இவளது
நறை நின்று கமழும் குஞ்சி நம்பி பால் பட்டதன்றே" [உள்ளம்

என்ற செய்யுள் வடிவில் காட்டுகிறார். மறுநாள் இரு மன்னர்களும் மணவினைக்கு ஆவன புரிந்தார்கள். நன்னாளில் முறைப்படி மணமக்களை நீராட்டி அலங்கரித்து இன்னியம் முழங்க நல் வாழ்த்தொலியிடையே சடியரசன் தன் மகள் சுயம்பிரபையை திவிட்டற்கு நீர் வார்த்தளித்து மணம் முடித்தான் பின் மணமக்கள், புனலாடியும் பொழிலாடியும் இனிதே இன்ப வாழ்வு நடத்தினர். இது நிற்க, இவையாவும் அறிந்த அச்சுவகண்டன் போருக்கு ஆயத்தமானான். இதனை அறிந்த திவிட்டனும் படைதிரட்டினான். இரு பக்கமும் படைகள் திரணடெழுந்து போர் முகம் புக்கன. அசசுவக்கண்டன் ஒரு மாயப்பேயை அனுப்பினான். திவிட்டன் பேருருவு கொண்டு பேரொலியிட்டு அதனை விரட்டினான். பின் கடும் போர் நடைபெற்றது. அவன் பக்கம் பலர் மாண்டனர். அச்சவக்கண்டன் படைகள் சிதறி ஓடவே அப்போது அவன் அவர்களைப் பார்த்து நீங்கள் உயிரைத்தான் பெரிதென மதிக்கிறீர்கள். மானமாம் பெரிய மணியை சிறந்ததாக நீங்கள் மதிக்கவில்லையே! கவரிமாவின் மானங்கூட மக்களாகிய உங்கட்கில்லையென்றால் நும் வீரம் எத்தகையதோ என இகழ்ந்து கூறுகிறான். அதனை

"மான மாமணி வீழ்த்து உயிர்க்கு
ஊனமாம் என ஓடுவீர்
ஈனவார் மயிர்க்கு ஏதமாம்
கானமாவது காணுமே."

என்ற செய்யுளால் அறியலாம். பின் தன் பக்கமுள்ள அனைவரும் மடியவே தானே வந்து போரிட்டான். சக்ராயுதத்தைக் கடைசியாக திவிட்டன் மீது வீசியெறிந்தான். அது திவிட்டன் கைக்கு வந்தது அவன் அதனை வணங்கி அச்சுவக் கண்டன்மீது ஏவினான். சென்றது ஆழி. கொன்றது அவனை. பின் தந்தையின் ஆணைப்படியே மணிமுடி சூடினான். கண்ணன் கோவர்த்தனம் எடுத்ததுபோல கோடிக் குன்றம் என்ற மலையை எடுத்து யாவருக்கும் தன் பெருமையினை உணர்த்தி நின்றான். பின் திவிட்டனுக்கு சின்னாட் கழித்து சோதிமாலை என்ற

பெண்ணும் விசயன் என்ற ஆணும் பிறந்தனர். சோதிமாலைக்குத் தக்க பருவத்தில் சுயவரம் நடத்தி தன் மகன் விசயனுக்கும் மணம் முடித்தான். இந்த அழகிய கற்பகம் போன்ற வாழ்வைக்கண்டு களித்த மன்னன் பயாபதி தவத்தில் பற்றுவைத்து அருகதேவனுக்கு விழா கொண்டாடி அவனருள் வேண்டி நின்றான். அங்கு வந்த முனிவன் ஒருவன் பயாபதிக்கு தவநெறியை உணர்த்தினன். பின் வீட்டின் இயல்பையும் அதனை அடையும் வழியையும் உணர்த்தவே, அவ்வழியே நின்று வினைகளை வேரறுத்து தியானவாள் கைக்கொண்டு அறுவகைக் குற்றங்களையும் ஞான வரணீயம் முதலிய நாற்பெரும் பகைகளையும வென்று கேவல ஞானம்பெற்று வீட்டிற்கோர் அழியாத முடிமணி-யாய் (அதாவது சூளாமணியாய்) விளங்கினன் பயாபதி மன்னன் இவ் வரலாற்றைக் கூறும் இந்நூல் பெருங்காப்பியமாகத் திகழுந்தகையது. ஆனல் இது பெருந்தொண்டரைச் சிறுத்தொண்டர் என் அழைப்பது போல சிறுகாப்பியமெனச் சொல்லப்படுகிறது.

' இப் பூவுலகில் 30 வித்தியாதர நகரஙகளும், அவந்தி முதலான 7 தேசங்களும் இருந்தாக இந்நூலால் அறியலாம். மதுரை, உறந்தை; காசி முதலிய ஐந்து நகரங்களைப்பற்றியும் இந்நூல் சிறப்பாகக் கூறுகிறது. இந்நூல் திருக்குறளை மிகவும் போற்றுகிறது. சிந்தாமணிச் சொற்றொடர்களும் கருத்துக்களும் இதில் காணப்படுகின்றன. வட சொற்களை இந்நூலாசிரியர் தமிழாக்கியும் தற்பவ முறையிலும் வழங்கி வருகிறார். இவர் வாதத்தில் வல்லவர் என்பது. இவர் தம் பெயராலும், "கற்றவன் கற்றவன் கருதும் கட்டுரைக்கு, உற்றன உற்ற உய்த் துரைக்கும ஆற்றலான்" எனவரும் தொடராலும் அறியலாம். பெண மக்கள் மணமின்றி இருப்பது பீடன்று என்று கருதுகிறார் இவர். திவிட்டன் தன் மக்கட்கு சுயம்வரம் நடத்தியபோது தமக்கு மாலை யிடாதது பற்றி மற்றைய மன்னர்கள் வருந்தவில்லை. வினைப்படி தானே நடக்கும என்று அமைதியுற்றனர். இதனல் அக்கால மக்களின் மனப் பண்பை அறியலாம்.

இங்ஙனம்,

**க. சம்பந்தனர்,** தமிழாசிரியர்,

தூய தாவீது உயர்நிலைப்பள்ளி, கடலூர்-முதுநகர்.

---

* இஃது அகில இந்திய வானொலியில் 18—11—'52 அன்று உயர்நிலைப்பள்ளி மாணவர்கட்கென பேசப்பட்டது. வானொலியார் இசைவுபெற்று வெளியிடப்பெற்றது.

# உலகம் வியக்கும் தென்னக நகைச்சுவை மன்னன்

நகைச்சுவையை, தன் நடையுடை பாவனைகளிலே காண்பித்து உலகமக்களை வியக்குமாறு செய்த, தென்னகத்தின் இணையீடு இல்லாத நகைச்சுவை மாணிக்கம் மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டதும் என் மனமானது அதிர்ச்சிகொண்டது நான் இருந்த இடங்கள் எல்லாம் என்னை சுற்றி சுழலுவதுபோல் இருந்தது. என் கண்களிலே கண்ணீர்த் துளிகள் சிதர ஆரம்பித்தன. ஏன் கண்ணீர் வடிக்கவேண்டும்? எதற்கு கண்ணீர் வடிக்கவேண்டும்? என்ற எண்ணம் மற்றவர்களுக்கு உதிக்கலாம், தோன்றலாம். இப்படிப்பட்ட மனம் உடையவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள், இப்படி என்னை கேட்பவர்கள் இந்த உலகத்தில் யாராய் இருக்கலாம் தெரியுமா? "தனக்கென வாழும் மானிடரே" ஆவர் நல்ல உள்ளம் படைத்தவர்கள். மானிட வர்க்கத்தில், இந்த சமுதாயத்தில் நல்ல நிலைமையில் உள்ளவர்கள் மட்டுமே என்னுடன் சேர்ந்து நகைச்சுவை மன்னனுக்கு அனுதாபம் தெரிவிப்பவர்கள். மேலும் சில மூடர்கள் இந்த கிருஷ்ணனைப்போல் ஆயிரம் கிருஷ்ணன் தோன்றுவார்கள் என்று வாயளவில் சொல்லித் திரியலாமேதவிர வேறு ஒன்றும் சொல்லமுடியாது. நம் தென்னகத்து நகைச்சுவை மன்னனைப் போல் இனியாவரும் தோன்றமுடியாது. அப்படித் தோன்றினும் நகைச்சுவை மன்னனின் குணத்தைப்போல் ஒரு சிறிதும் இருக்க முடியாது என்பது தெற்றத் தெளிவாக தெரியக்கூடிய விஷயமாகும் நம் நகைச்சுவை மன்னனின் வாழ்க்கை வரலாற்றைப் பார்ப்போமானால், படிப்போமானால், நம் மனமானது ஆச்சரியப்படும்படி, அதிசயப்படும்படி அவரது வாழ்க்கை வரலாறு அமைந்துள்ளது. அவர் எழுதிய சில புத்தக வாயிலாக அறிந்த நான் அவரது வாழ்க்கை வரலாற்றை சுருக்கித்தர அவாக் கொண்டு, இதில் எழுதி இருக்கிறேன். நாம் அவற்றைக்கண்டு அவரது இன்னல்களையும், இன்பங்களையும் அறியலாம், காணலாம், பாாக்கலாம்.

நமது நகைச்சுவை மன்னர் அவர்கள் 1908-ம் ஆண்டு நவம்பர் மாதம் நாஞ்சில் நாட்டில் (கன்னியாகுமரி ஜில்லாவில்)

உள்ள ஒழுங்கினசேரி என்னும் ஊரில் பிறந்தார் அவர் ஏழைக் குடும்பத்தில் பிறந்த காரணத்தால் நான்காம் வகுப்பு வரையிலும் தான் படிக்க முடிந்ததாம். அதற்குமேல் படிக்க வசதி இல்லை-யாம் இவர் சிறுவயதிலேயே சம்பாதிக்கவேண்டிய நிலை ஏற் பட்டதாம். பிறகு இவர் டி. கே எஸ். நாடகக்குழுவில் சேர்ந்து நாடகத்தில் நடித்து நாட்டுமக்களின் நல்லாதரவை நாடி நல்ல புகழ் அடைந்து பிறகு சினிமாவில் நடித்து நகைச்சுவை நாவரச ஞக நம் உள்ளத்தில் நாட்டம் கொண்டுவிட்டார். வசந்தசேனை என்னும் படத்தில் நடிக்கும்போது டி. ஏ. மதுரத்தை சந்தித்தா-ராம். அதற்குப்பிறகு துளசிதாஸ் என்னும் படத்தில் இவர்கள் ஜோடியாக நடித்தார்களாம். அந்தப்படத்தில் இருந்து இது வரை அதாவது இவர் இறக்கும்வரை சுமார் இருபது ஆண்டு காலமாக இவர்கள் இருவரும் துணையாக இருந்து இல்லறத்தை நடத்திவந்ததை நாம் பார்க்கும்போது நம் உள்ளத் தில் மகிழ்ச்சி உண்டாகிறது அல்லவா ?

இவர்கள் 1951 ம் ஆண்டு ரஷ்ய அரசாங்க அழைப்பின் பேரில் ரஷ்யாவிற்குப்போனது முதல் கலைத்தம்பதிகள் ஆவர். இந்தக் கலைவாணர் இந்த நூற்றுண்டின் கொடைவள்ளல் என்று சிறப்பாக, தென்னகமே போற்றுகிறது.

பசி என்று இவர் வீட்டுக்குப் போனால் வாடி வதங்கி ஒட்டி இருக்கும் வயிற்றுக்குப் புடைக்குமளவிற்கு உணவு கிடைக்கும் என்பதில் உறுதி. இவர் ஏழை எளியவர்க்கு அள்ளிக்கொடுக் கும் தனவந்தர்

இவர் காந்திமகான்மீது அதிக அன்பும் மரியாதையும் உடையவர் என்பதை சுமார் ஓர் ஆண்டுக்கு முன்பு தன்னுடைய சொந்த ஊரில் பெரிய காந்தி நினைவுச்சின்னம் எழுப்பியதிலிருந்தே நாம் அறிந்துக் கொள்ளக்கூடும். இதுமட்டுமன்றி பல்லாண்டுக ளாகவே காந்திமகானின் கதைகளை வில்லுப்பாட்டாகப் பாடி பாமரமக்களைப் பரவசப்படச் செய்த புகழும் சான்று பகரும்

இப்படிப்பட்ட கலைவாணர் என். எஸ். கேயை கிடைத்தற் கரிய மாணிக்கத்தை, எம்லோரையும் சிரிக்கவைத்து சிந்திக்கச் செய்யும் நகைச்சுவை மன்னரை இன்று பிரிந்து வருந்தவேண்-டியதாகிவிட்டது.

"தோன்றிற் புகழொடு தோன்றுக — அஃதிலார்
தோன்றலில் தோன்றாமை நன்று."

என்ற வள்ளுவர் வாய்மொழிக் கேற்ப நம் கலைவாணர் தோன்றினார். நல்ல புகழுடன் விளங்கினார். கடைசியில் நம்மை எல்லாம் துன்பவெள்ளத்தில் மூழ்கச்செய்து அவர் இவ்வுலகை விட்டு அகன்றார். அவர் பூதவுடல் நம்மைவிட்டுப் பிரிந்தது. ஆனால் மக்களுக்காகப் பாடுபட்ட மாபெரும் கலைஞரின் புகழுடல் என்றும் நம்மிடை நிலைத்து நிற்கும்.

**அ. வள்ளிநாயகம்.**
*5-ம் படிவம் அ. பிரிவு.*


# JOHN WILLIAM AND COMPANY,

FULL MOULD TYRE REBUILDERS,

**Tirupapuliyur P. O. :: Cuddalore N. T.**

The Home for Perfect Scientific Rebuilding
of Tyres using High Grade Materials

*We Guarantee*

**Efficient Service** **Economy in Tyres**
**Nominal Charges** **Prompt Delivery**
**Tread, Workmanship and Mileage.**

*A Trial will convince you*

**P. S. JOHN,**
*Proprietor.*

# இறுதிச்சொல் அலங்காரம்

வாழ்வளிப்பது கொடை!
பணம் அளிப்பது முடை!
மாணவன் அளிப்பது விடை!
அவளிடம் இருப்பது ஜடை!

நாட்டில் வருவது பஞ்சம்!
அவன் வாங்குவது லஞ்சம்!
ரஞ்சன் நடிப்பது வஞ்சம்!
மருந்து கெடுப்பது கொஞ்சம்!

அவன் வாங்குவது வட்டி!
பிச்சை வாங்குவது சட்டி!
மாடு அடைப்பது பட்டி!
அவனை எழுப்புவது தட்டி!

கொடுப்பதில் சிறந்தது தானம்!
உயரத்தில் சிறந்தது வானம்!
உயிரினும் சிறந்தது மானம்!
அதனிலும் சிறந்தது நிதானம்!

மிருகத்தில் பெரியது யானை!
அவளிடம் இருப்பது பானை!
குழந்தை தூங்குவது ஏணை!
அவன் பிடிப்பது சாணை!

தாகத்தை தீர்ப்பது தென்னை!
வடக்கே இருப்பது சென்னை!
நாம் அமர்ந்திருப்பது திண்ணை!
அடுத்து இருப்பது பெண்ணை!

சுவரில் இருப்பது சிலை!
மீன் பிடிப்பது வலை!
அவன் செய்வது கொலை!
நான் எழுதுவது கலை!

இராமன் கையிலிருப்பது வில்லு!
இந்த பாம்பை கொல்லு!
நீதியை அவனுக்கு சொல்லு!
அவனோடு எண்டா மல்லு!

அவள் கையில கட்டி!
இதோ குரங்கு குட்டி!
அதோ இருக்கு புட்டி!
ரூபாயிக்கு காபணம் வட்டி!


பற்றி எறியுது நெருப்பு!
காலில் இருப்பது செருப்பு!
இதோ ஜாதக குறிப்பு!
அவன் வைத்திருப்பது இருப்பு!

**S. K. SWAMY,**
**S. S. L. C.**

# தமிழகம் தந்த தியாகச் செம்மல்கள்

### *தமிழகத்தின் தனிப்பெரும் சிறப்பு :*

பல்வளம் பெற்றுப் பெருமைபெற்றது நம் பைந்தமிழ் நாடு! விளைபொருள் வளத்திலே, செல்வ வளத்திலே, நாகரீக வளத்திலே, மொழி வளத்திலே—முழுமை பெற்றது நம் முத்தமிழ் நாடு! என்னாட்டவர்க்கும் இல்லாப் பெருமை நம் பொன்னாட்டிற்கே உரியது. வடவேங்கடம் முதல் தென்குமரிவரை இடைப்பட்ட நிலம் கன்னித் தமிழன்னையின் ஆட்சி பெற்று மாட்சி உற்றது.



சுதந்திர போராட்ட நூற்றாண்டு விழாவில் நடந்த தென்னாற்காடு மாவட்ட கட்டுரைப் போட்டியில் முதற் பரிசு பெற்றவன்
C. A. சங்கரமணி, VI Form,

நம் பண்டைத் தமிழகத்தின் கண்ணே எவ்வளமும் சிறந்து விளங்கி, தியாகநலம் திகழ்ந் தொளிசெய்தது ; தியாக வீரர் பல்லாயிரவர் பாங்குடனே வாழ்ந்தார் வண் தமிழ் நாட்டிலே! வாழையடி வாழை யென வந்த வீரர் மரபிலே உதித்த உயர் வீரர்களே பாஞ்சைப்பதிக் கோமகன் சட்ட பொம்மனும், ஒட்டப்பிடாரம் தந்த உத்தமர் சிதம்பரனாரும்.

### *அண்டி வந்தோரின் அடாத செயல் :*

தமிழகத்தின் தனிப்பெரும் சிறப்பினை செவியுற்றனர் பறங்கியர். தீந்தமிழகத்தின் வாசனைப் பொருட்களைக் கண்ணுற்று, வியப்புற்றனர். நம் திருநாட்டுடன் வணிகம் புரிய கப்பலேறி வந்தனர். செவியுற்ற செந்தமிழ் நாட்டைக் கண்ணுற்ற வெள்ளையர் வாயைப் பிளந்தனர். ஏன் ? செந்தமிழ் நாட்டின் செழுமை கண்டு! வண்தமிழ் நாட்டின் வளமை கண்டு! வீரத் தமிழகத்தின்

வீரம் கண்டு! பைந்தமிழகத்தின் பண்பைக் கண்டு! வணிகம் புரிய வந்த வெள்ளையர்க்கு நாடாள நாட்டம் பிறந்தது

சிறு நரிக்குணம்படைத்த வெள்ளையர் பிரித்தாளும் படலம் நடத்தினர். குறுநில மன்னர் அவர் தம் வலையில் வீழ்ந்தனர். வீரத்தால் வீழ்ச்சியுறு விரல்வேந்தர் சூழ்ச்சியால் வீழ்ச்சியுற்றனர். ஆனால், பாஞ்சைப் பகுதியின் காவலன் கட்டபொம்மன் கலங்கினானில்லை! அண்டிவந்தோரின் ஆயுதம்கண்டு "கப்பம் கட்டு" என்று கட்டபொம்மனை நெருங்கினர் வெள்ளையர். இடிபோல் சிரித்தான் செந்தமிழன். "வானம் பொழிகின்றது; வளமிக்க என் பொன்னாடு விளைகின்றது. அந்நாட்டின் காவலன் நான், அண்டிவந்த நீ, அரசனிடமா கப்பம் கேட்கிறாய்! போர்முனையிலே தருகிறேன் கப்பம்! வீரமிருந்தால் பெற்றுக்கொள்" — என்று ஆவேசம் ததும்ப, வீரவுரை ஆற்றினான் மன்னன். வீரமில்லா வெள்ளையர் வெருண்டனர். இவ்வுரை கேட்டு; சினங் கொண்டனர்; சீறி எழுந்தனர்

*வாள் முனையிலே வெற்றி :*

பறங்கியரின் பீரங்கிப்படை புறப்பட்டது பாஞ்சைப்பதி நோக்கி. எதிர்க்கக் கூர் வேலும், வெல்வாளும் கொண்டு புறப்பட்டது மறத்தமிழர் படை மழையெனப் பொழிந்தது பீரங்கி குண்டுகளை! இடது சாரி, வலது சாரியெனச் சுழன்றது வாள்!

வீர விளையாட்டு நிகழ்த்தினான் வீரபாண்டியன்! வாளின் ஒவ்வோர் வீச்சிற்கும், பறங்கியர் படையிலே, படைஞர் தம் சிரங்கள் மண்ணில் உருண்டன. வீரபாண்டியன் வாளின் கூர்மை கண்டனர் வெள்ளையர், உடன், பின் வாங்கினர். வெற்றி வீரபாண்டியனுக்கே! வெற்றியின் பயனாய், பாஞ்சையிலே மக்கள் உள்ளங்களிலே உவகை பொங்கிற்று.

*வீழ்ச்சிற்குச் சூழ்ச்சி*

அடிப்பட்ட பாம்பு விடுபட்ட அம்பு இவை வீணே செல்வதில்லை; அதேபோல் வீழ்ச்சியுற்ற வெள்ளையர்கள் உளம் பொருமினர் "வீரத்தால் வெல்ல முடியாது தமிழ் மகனை" என்பதைக் கண்கூடாக உணர்ந்தனர் வீரத்தால் வெல்ல இயலாவிட்டாலும் சூழ்ச்சியாலாவது வென்றுவிடலாம் என்ற நம்பிக்கை பலமாக இருந்தது பறங்கியர்க்கு!

" அகத்தேயாயினும், புறத்தேயாயினும் நம்மை எதிர்ப்பது சிறு புல்லேயாஞலும் முதலில் அதனை அழித்தே ஆக வேண்டும் " என்ற சாணக்கியமதி படைத்த வெள்ளையர் சூழ்ச்சித் திட்டத்தை வகையோடு வகுத்தனர் அதன் பலன், புதுக்கோட்டைச் சீமான் வீரபாண்டியனைக் காட்டிக் கொடுத்-தான் கயவர்களுக்கு! காட்டிக் கொடுத்ததற்கு, துரோகத்தின் பரிசிலாக கனகாபிஷேகம் புதுக்கோட்டைச் சீமானுக்கு!

## *தூக்கிலே தூயோன்!*

தூக்கிலே தொங்கினன் தூயோன், தான் பிறந்த அன்னைத் திருநாட்டின் தனிப்பெரும் விடுதலைக்காக தன்னரசு, இழந்தும் தீரம் குறைந்தானில்லை; அன்னியரால் சிறைப்பிடிக்கப்பட்டும் ஆண்மை அழிந்தானில்லை;

இறுதியில் தூக்கிலே தொங்கப்போகின்ற நேரத்தில்கூட, பிறர் கையால் தூக்கிலிட்டுச் சாவதை விரும்பவில்லை அம் மறத் தமிழன். "மரணத்தைக்கண்டு மருள்பவன் மனிதன் அல்லன் எனக் கருதும் மறத்தமிழர் மரபில் வந்த வீரபாண்டியன் தூக்குக் கயிற்றைக் கண்டுக் கலங்கவில்லை. மாருக நகை செய்தான். தூக்குக் கயிற்றை, தீங்குயில் கூவிடும் மாஞ்சோலையில் தவழும் தென்றலாய், மாலையில் தோன்றும் முழுமதியாட் நினைந்து, தன் கரத்தால் தன் கழுத்தில் தூக்குக் கயிற்றினை மாட்டி, விண்ணுலகடைந்தான் வீரத்தமிழ் மகன்!

சுதந்திர தேவதைக்குத் தன்னைப் பலி இட்டான் முதன் முதலிலே ஓர் மாசற்ற மறத் தமிழன்; ஆனல், அத்துடன் நிற்கவில்லை அத்தேவதையின் தீராப்பசி! அக் கொடும்பசிக்கிலக்கானர் மற்றோர் தமிழ் மகனர்!

## *வீர சிதம்பரனர் தம் சீரிய வாழ்வு!*

ஒட்டப்பிடாரத்திலே, உலக நாதம் பிள்ளையின் திரு மகனய்த் தோன்றினர் சிதம்பரனர். வக்கீல் தொழில் புரிந்தார். பொருள் மிக ஈட்டினர் பெரியோர் புகழ்ந்த நற்றருமந்தனை செய்தார் ஏழைகளின் துயர் துடைத்தார். இந்நிலையே, அண்டி வந்த வெள்ளையரின் ஆதிக்கம் கடுமையானது கொடுமை மிளிரலாயிற்று சிதம்பரனர் தம் நாட்டின் நிலையுணர்ந்தார். விடுதலை வேட்கையுற்றர்

"சாவகம் ரோம் முற்றும் ஏனைய தேயங்களுக்கு மரக்கலம் ஓட்டி, வணிகம் வளர்த்து, பொருள் வளர்த்து, புகழ் வளர்த்து, நிலை உயர்ந்து பொன் கொழித்த நாடா இன்று கப்பல் வியாபாரிகளுக்கு அடிமையாக இருக்கின்றது" என்று எண்ணி, எண்ணி உளம் நொந்தார். வணிகம் வளர்த்த தமிழரின் வணிகம் நசுக்கப்படுதலை எண்ணினர். அவர் தம் உள்ளத்திலே ஓர் உயரிய எண்ணம் எழுச்சி பெறலாயிற்று. அதனை செயலிலும் நிறை வேற்றினர் நிறைமதி சிதம்பரனர்

***கப்பலோட்டிய தமிழன் !***

சிதம்பரம் பிள்ளையின் நீங்கா முயற்சியின் பலனய், அவர்க்கு உரிமையான ஓர் கப்பல் தமிழன் பழம் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்ட, இலங்கை மற்றும் ஏனைய தேயங்களுக்கும் வணிகம் புரிய புறப்பட்டது. இதை அறிந்த வெள்ளையர் வெருண்டனர் திடுக்கிட்டனர்! இதுகாறும், கடல் வாணிகம் தமக்கே உரியது என எண்ணியவர்களுக்கு இது அதிர்ச்சியைத் தானே தரும் !

***சிதம்பரனர் தம் மாசற்ற வீரம்!***

உளம் வெருண்ட வெள்ளையர் உடனே சிதம்பரனரை அணுகினர் ! கப்பல் தொழிலை விட்டுவிடும் என வெருட்டினர். "நாமார்க்கும் குடியல்லோம்; நமனை அஞ்சோம்" என சிம்ம கர்ஜனை புரிந்த நாடல்லவா இது ! சிதம்பரனர் ஓர் கோழையா என்ன ! அஞ்சவில்லை அவர்: அஞ்ச வருவதும் ஒன்றுமில்லை. என்றெண்ணியவராய் வெள்ளையர் தம் எண்ணத்திற்கு மறுப் பளித்தார்

சிறுமதி படைத்த பறங்கியர் 'ஓர் இலட்சம் ரூபாய்கள் தருகிறேம்; மரக்கலத் தொழிலை விட்டு விடும்" என ஆசை வார்த்தைகளை அள்ளி வீசினர் மனமாற்றம் அடையவில்லை அவர். 'பணத்தாசை கொண்ட கயவன் அல்ல நான்!" என வீரவுரைதனை உரைத்தார். வெள்ளையர் ஏமாற்றம் உற்றனர்.

தக்க வழிதேடி, தகுந்த தருணம் நோக்கிக் காத்திருந்தனர் உறுமீன் வருமளவும் வாடியிருக்கும் கொக்கின் நிலையுற்றனர் அத்தீயோர். பின் அரசாங்கத் துரோகி என குற்றம் சாட்டி சிதம்பரனரைச் சிறையிலிட்டனர்.

*சிறையில் சிதம்பரனார் !*

சிறையில் செக்கிழுத்தார் செம்மல்; கல் உடைத்தார் கருணை வள்ளல்; ஏன்? என்னக்குற்றம் செய்தார் அக் கோதிலாக் கோமான் உள்ளம் உவக்க, உதிரம் ஒழுகக் கொலை புரிந்தாரா ? நம்பினோரை அடுத்துக் கெடுத்தாரா ? பொய் வார்த்தை புகன்றாரா ? இல்லை ! இல்லை !! பின் என்ன குற்றம் செய்தார்? தன் அன்னைத்திரு நாட்டில் மாற்றான் ஆதிக்கமா ? என மார் தட்டிக் கேட்டதற்கு இக் கொடிய தண்டனை.

*தியாக வீரர்களின் வெற்றி!*

விடுதலைக்காகச் சிறை சென்ற சிதம்பரனார் தன்னாட்டின் விடுதலை பெற்றநாளை காணாமலே உயிர் நீத்தார். வீர சிதம்பரனார் தம் முயற்சியிலே வீழ்ச்சியுற்றார் இல்லை. வீரபாண்டிய கட்ட-பொம்மனும் அவ்வாறே ! வீரபாண்டியக் கட்டபொம்மன் தூக்கிலே தொங்கினான்; வீர சிதம்பரனார் சிறையிலே சொல்-லொணாத் துயருற்றார்; அல்லலுற்று உயிர் நீத்தார் வெள்ளையர். தாம் வெற்றியுற்றதாக கும்மாளம் கொட்டினர்; கொக்கரித்தனர். ஆனால், உண்மையில் வெற்றி பெற்றது யார் ? தமிழகம் தந்த தியாகச் செம்மல்களாம் கட்டபொம்மனும், சிதம்பரனாருமே !

வெள்ளையரால் அவ்வீரர்களின் உடலைத்தான் ஒடுக்க முடிந்ததே தவிர, அவர் தம் உள்ளத்தை ஒடுக்க முடியவில்லை. முயற்சித்தாலும் முடியாததோர் முயற்சி !

தமிழகத்தின் தியாகச் செம்மல்கள் என்றோ அழிந்தனர்! உடல்கள் மண்ணோடு, மண்ணாய், அணுவோடு அணுவாய், கலந்துவிட்டன ! ஆனால், அவர்தம் உள்ளங்களினின்றும் கிளம்பிய உயரியக் கொள்கைகள் இன்றும் நம் உள்ளங்களிலேயே உலவுகின்றனவே !

"தோன்றிற் புகழொடு தோன்றுக - அஃதிலார்
தோன்றலிற் தோன்றாமை நன்று!"

என்று நவின்ற வள்ளுவன் வழி சென்ற அச் செம்மல்களின் சிறப்பை என்றும் கல்பாடும் ; சொல்பாடும் ; புவி பாடும் !

வளர்க அவர்தம் புகழ் !

*C. A. சங்கரமணி,*
Form VI

# வியப்பினும் வியப்பே !

வானத்தை நோக்கின் வியப்பே!
வானதாரகை தனைநோக்கின் வியப்பே!
வான்மதியாம் பான்மதியை பார்ப்பின்
வியப்பே!
வானப்பரிதியைப் பார்ப்பின் வியப்பே!
வண்ணமேகப் பன்னிறத்தைப் பார்ப்பின்
வியப்பே!
வையத்தை நினைக்கின் வியப்பினும் வியப்பே!

நிலமதில்செடி கொடியைப் பார்ப்பினும்
வியப்பே!
நிகரில்லாநெடு மலையைநோக்கினும் வியப்பே!
நீலக்கடல்அலை ஒலிகேட்பினும் வியப்பே!
நிலவும்வானும்பேரெழில் தரினும்அஃதும்
வியப்பே!
நிறுவியவொருவன் திருக்கைத் திறனை,
நிலையிலாநின்மனம் நினையாதிருப்பது
வியப்பினும் வியப்பே!

*சே. வி. நிக்கோலாஸ்,*
*ஆறும் படிவம்,*
*தூய தாவீது உயர்நிலைப்பள்ளி,*
*கடலூர், ப. பட்டிணம்.*

# அண்ணமலை இன்டிபென்டென்ட் கம்பெனி

## தேசீய மாணவர்படை ஜூனியர் டிவிஷன்

### வருடாந்திரப் பயிற்சி முகாம் 1957-58

இடம் :- *செயின்ட் ஜோசப் உயர்நிலைப்பள்ளி, கடலூர்-புதுநகர்.*

காலம் :- 12—10—57 *முதல்* 21—10—57 *வரை.*

1957-ம் வருடம் அக்டோபர் திங்கள் 12ம் தேதியன்று காலை 10 மணியளவில் நமது தேசீய மாணவர் படையைச் (National Cadet Corps Troop No. 64) சேர்ந்த எல்லாப் (33) பயிற்சி மாணவர்களும் (Cadets) படைத் தலைமை அதிகாரியும் (Troop Commander) பள்ளித் தலைமை ஆசிரியரின் உத்திரவு பெற்று, மேற்கூறிய வருடாந்திரப் பயிற்சி முகாமில் பங்கெடுத்துக் கொள்ளும் நோக்கத்தோடு, கடலூர் பழைய-நகர் புகைவண்டி நிலையம் நோக்கி அரசாங்கத்தாரால் கொடுக்கப்பட்டிருக்கும் உடையை அணிந்து (N. C. C. Uniform) ராணுவ முறைப்படி ஒழுங்கான நடையுடன் (Marching) சென்றோம். கடலூர் பழைய-நகர் மக்கள் எங்கள் வீர நடை கண்டு களித்தனர். நிலையத்தை அடைந்த சிறிது நேரத்திற்குள் புகைவண்டி வந்து, வண்டியில் ஏறி அமர்ந்தோம். எங்களை நாங்கள் இறங்க வேண்டிய திருப்பாதிரிப்புலியூர் என்ற நிலையத்துக்கு ஐந்து நிமஷத்துக்குள் கொண்டு செலுத்தியது. மிகவும் குறுகிய நேரப் பிரயாணம் எங்களுக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தது. திருப்பாதிரிப்புலியூர் நிலையத்தில் இறங்கி அங்கிருந்து மறுபடியும் வீரநடைபோட்டு பயிற்சி முகாமை நோக்கி சென்றோம் எங்களோடு மற்ற இடங்களிலிருந்து அதே புகைவண்டியில் பிரயாணம் செய்து வந்த மற்ற பள்ளிக் கூடத்துப் படைகளும் அவ்விதமே ஒன்றின்பின் ஒன்ருய் அழகாக முகாமை நோக்கி நடந்தன. கடலூர்-புதுநகர் மக்களுக்கு எல்லாப் படையினருடைய வீர நடைகளையும் கண்டு களிக்கும் வாய்ப்பு கிடைத்தது.

நாங்கள் அன்று மதியம் சுமார் 12-30 மணிக்கு முகாமையடைந்து எங்களுடைய வருகையை முகாம் அதிகாரிகளிடம்

அறிவித்து விட்டு (Arrival Report) எங்களுக்கென்று ஒதுக்கப் பட்டிருந்த இடத்தில் எங்களுடைய ராணுவப் பைகளை (Kit-bags) வைத்துவிட்டு, மத்தியான உணவை மேற்கொண்டோம். பின், எங்களுக்கென்று கொடுக்கப்பட்ட மூன்று கூடாரங்களை-யும் (Tents) ராணுவத்தினரால் அமைக்கப்பட்டிருந்த மாதிரி கூடாரத்தைப் (Model Tent) பார்த்து, அதன்படி அமைத்து அதில் எங்களுடைய வாழ்க்கையை ஆரம்பித்தோம்.

தென் ஆற்காடு, வட ஆற்காடு, தஞ்சாவூர் என்ற மூன்று ஜில்லாக்களிலுள்ள பள்ளிக்கூடங்களிலிருந்தும் மொத்தம் 22 படைகளுக்குரிய சுமார் 800 பயிற்சி மாணவர்களும், 22 தேசிய மாணவர்படை அதிகாரிகளும், சில ராணுவ அதிகாரிகளும் முகாம் பயிற்சியில் பங்கெடுத்தார்கள் முகாமில் அதிகாரிகளுக்கென பிரத்தியேகமாக விடுதிகள் கொடுக்கப்பட்டிருந்தன தவிர முகாமில் கீழ்க்கண்ட இடங்கள். தனித்தனியே அமைக்கப் பட்டிருந்தன. வைத்திய அறை (M. I Room), அதிகாரிகள் சாப்பாட்டு அறை (Officers' Mess) பயிற்சி மாணவர்கள் சாப்பாட்டு அறை (Cadets' Mess), சமையல் அறை (Cook House), ஸ்டோர், ஆயுத அறை, சிற்றுண்டிச்சாலை (Canteen) உல்லாசப் பொழுதுபோக்கு அறை (Recreation Room) முகாம் அலுவலகம் (Camp Office) முதலியன.

முகாமை மேற்பார்வையிட கீழ்க்கண்டவாறு அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருந்தார்கள் ;

| முகாம் தலைவர்: | முகாம் உதவி தலைவர்: | முகாம் தளகர்த்தர்: |
|---|---|---|
| **Camp Command,** | **Second in Command,** | **Camp Adjudants,** |

| பயிற்சி அதிகாரி | உணவு அதிகாரி | சிற்றுண்டி அதிகாரி | பாதுகாப்பு அதிகாரி |
|---|---|---|---|
| **Training Officer,** | **Mess Officer,** | **Canteen Officer,** | **Security, Reception & Sanitaion** |

| விளையாட்டு அதிகாரி | பொது அமைப்பு அதிகாரி |
|---|---|
| **Officer, Sports Office,** | **Camp Quarter Master,** |
| வரவேற்பு க்ஷேமநல அதிகாரி | சுகாதார அதிகாரி |
| **Welfare Officer,** | **Officer in Charge of Hygiene.** |

தவிர முகாமில் கலந்துக்கொண்ட 22 படைகளையும் பயிற்சியின் (Training) நலனை உத்தேசித்து நான்கு பெரும் பிரிவுகளாகப் (Company) பிரித்து முறையே A. B. C. D. என்று பெயரிடப்பட்டிருந்தது. நாங்கள் B கம்பெனியோடு இணைக்கப் பட்டோம். ஒவ்வொரு கம்பெனிக்கும் பயிற்சி மாணவர்களி லிருந்து ஒரு கம்பெனி சார்ஜண்ட்டும், அதிகாரிகளிலிருந்து ஒரு கம்பெனி கமாண்டரும் நியமிக்கப் பட்டார்கள். கம்பெனிவாரியில்தான் போட்டிகள் நடத்தப்பட்டன அதன் படிதான் வசிக்கும் இடங்களும் ஒதுக்கப்பட்டிருந்தன. ஒவ்வொரு படைக்கும் (Troop) தனித்தனியே வெவ்வேறு நிறக்கொடிகள் (Flags) கொடுக்கப்பட்டு அன்றுடம் பறக்க விடப்பட்டன.

முகாம் வாழ்க்கை கீழ்கண்டவாறு தினம்தோறும் நடை பெற்றன.

| | | | | |
|---|---|---|---|---|
| காலை | 5–30 | | மணி | தேநீர் |
| ,, | 6–30 | 7–00 | ,, | தேகாப்பியாசம் |
| ,, | 7–00 | 8–00 | ,, | காலை உணவு |
| ,, | 8–00 | 12–35 | ,, | ராணுவப் பயிற்சி |
| மாலை | 12–35 | 3–00 | ,, | மதிய சாப்பாடு, ஓய்வு, தேனீர் |
| ,, | 3–00 | 5–15 | ,, | விளையாட்டு சொற்பொழிவு |

13—10—57 காலை சுமார் 10-30 மணிக்கு முகாமை மாவட்ட மருத்துவ அதிகாரி டாக்டர் T. N. விஸ்வநாதன் M.B,B.S, பார்வையிட்டு முகாமை திறந்துவைத்து சொற்பொழி வாற்றினர். அன்று மாலை 4-30 மணியளவில் மாவட்ட சாரணர் இயக்க கமிஷனர் (District Scout Commissioner) டாக்டர் V. கிருஷ்ணமூர்த்தி L. M. P., முகாம் பயிற்சி துவக்க விழா சொற்பொழிவாற்றினர். அவ்வமயம் சிதம்பரம் மக்கட் சபை பிரதிநிதி திரு. இளையபெருமாள் வருகை தந்து விழாவைச் சிறப்-பித்தார். 14—10—57ல் தென்னற்காடு மாவட்ட கல்வி அதிகாரி திரு ஜோஷ்சுவா, B.A.,L.T, பயிற்சியை பார்வையிட்டு சொற் பொழிவாற்றி மாணவர்களுக்கு ஊக்கத்தையும், உற்சாகத்தை யும் ஊட்டினர். 17—10—57 அன்று 5-வது சென்னை சிக்னல் பகுதியைச் சேர்ந்த காப்டன் V. கோவிந்தசாமி அவர்கள்

முகாமுக்கு வந்து ஒரு அரும்பெரும் உறை நிகழ்த்தினர். 17—10—57ல் நகராட்சி மன்ற அதிகாரி (Municipal Commissioner) திரு S வீரராகவ ராஜு, B A, அவர்கள் பயிற்சியைப் பார்வையிட்டு சொற்பொழிவாற்றினர்.

முகாமில் ராணுவப் போலீஸ் வேலை பார்க்க எல்லா பள்ளிக்கூடத்து படைகளுக்கும் வாய்ப்புகள் கொடுக்கப்பட்டன. 19—10—57ல் நாங்கள் அவ்வேலைக்கு நியமிக்கப்பட்டோம். அன்று பெரிய மழையும், இடியும் இருந்தது. மாவட்ட கலெக்டர் ஆபீஸில் இடி விழுந்ததன் காரணமாக S. S. L C பரீட்சை எழுத வந்த இளம் மாது ஒருத்தி உயிரை இழக்க நேர்ந்தது. அம்மாதிற்கு இடி விழுந்தவுடன் நமது பள்ளிக்கூடப் படையைச் சேர்ந்த செக்ஷன் லீடர் எம் ஏ மன்சூர் செய்த முதல் உதவி (First aid) இங்கே மிகவும் சிறப்பாக குறிப்பிடத் தக்கது. அவனுடைய சமயோசித புத்தியையும் (Presence of mind) முதல் உதவியையும் அதிகமாகப் பாராட்டி அன்று வெளியான முகாம் அறிக்கை (Camp Order) பின் கண்டவாறு பிரஸ்தாபித்தது, நம் பள்ளிக்கும், படைக்கும் மதிப்பைக் கொடுக்கிறது.

Camp orders, by Captain D. L. Dharmalingam Camp Commander, N. C. C. Junior Division Annual Camp, Cuddalore N. T order No. 7 Dated 19 10—57

*Compliments:* S.L.M.A. Manzoor of Cuddalore O. T did 'first aid' to the girl who had a lightening shock His timely help and presence of mind are very much appreciated.

(*Sd*) THOMAS, D. S.
18—10—57 S. O.
Camp Adj. N.C.C. Jr. Div. Camp
Cuddalore N. T.

இறுதியாக 20—10—57ல் நடந்த வைபவம், முகாம் பயிற்சி மாணவர்களுடைய வாழ்க்கையில் ஒருக்காலும் மறக்க முடியாத வகையில் நடந்தேறியது. இறுதி நாள் வைபவத்திற்குத் தலைவராக சென்னை கல்வி அதிகாரி (Director of Public

Instructions, Madras) திரு. N. D. சுந்தரவடிவேலு M.A., L.T., அழைக்கப்பட்டிருந்தார். அழகிய முனிஸிபல் மைதானத்திலே அமைக்கப்பட்டிருக்கும் மேடை ஒன்று என்றுமே கண்டிராத முறையில் பலவர்ண கொடிகளாலும், மின்சார விளக்குகளாலும், பூத் தொட்டிகளாலும், அலங்கரிக்கப்பட்டு நகர மக்கள் கண்ணைப் பறித்தது தலைவரை வரவேற்று ஆங்காங்கே நகரில் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன அன்று மாலை சுமார் 4 மணிக்கு முகாம் பயிற்சி மாணவர்கள், அதிகாரிகள் எல்லோரும் படைகளை அணிவகுத்து ஒழுங்காக அலங்கரிக்கப்பட்ட மேடை முன்னர்போய் நின்றார்கள். முகாம் தலைவர் காப்டன் டி. எல், தர்மலிங்கம் அவர்கள் விழாத் தலைவரை வரவேற்று ஜீப்பில் ஏற்றிப் படைகளை எல்லாம் பார்வையிடச் செய்தார். விழாத்தலைவர் வந்தனங்களை ஏற்ற பின்னர் அலங்காரமான மேடைமீது ஏறினார். மாணவர்கள் சந்தோஷத்தால் கையைத் தட்டி உற்சாகத்தையும் நன்றியையும் தெரிவித்தார்கள். பின் பரிசுகள் வழங்கப்பட்டன. கூட்டு தேகப் பயிற்சி (Mass Drill) பயிற்சி மாணவர்களாலும், மாணவிகளாலும் செய்து காட்டப் பட்டது.

முகாம் தலைவர் விழாத் தலைவரை அறிமுகம் செய்து பேசினார். பின்னர் விழாத்தலைவர் இளம் மாணவர்களாகிய எங்களுடைய உள்ளத்தை ஊக்குவித்து, தேசீய மாணவப் படையின் நோக்கத்தையும், அதனால் மாணவர்கள் அடைந்து வரும் பலன்களையும் குறித்து செந்தமிழில் உணர்ச்சி மிக்க சொற்பொழி வாற்றினார். கடைசியாக முகாமில் கலந்துகொண்ட எல்லா பள்ளிக்கூடங்களின் சார்பிலும் தனித்தனியாக படை தலைமை அதிகாரிகளால் (Troop Commander) மாலைகள் விழாத் தலைவருக்கு போடப்பட்டது. முகாம் உதவித் தலைவர் நன்றிகூற தேசீய கீதத்துடன் கூட்டம் இனிது கலைந்தது.

இம் முகாம் பயிற்சியினால் நாங்கள் அடைந்த பலன் ஏராளம். தேசீய மாணவர் படையின் நோக்கங்களில் கண்டிருக்கிறபடி, முகாம் எங்கள் நடத்தையை சீர்படுத்தவும். சமத்துவம் சகோதரத்வம் முதலிய நற்பண்பில் முன்னேறவும் சேவையின் மகத்துவத்தை உணரவும்,பல வழிகளில் எங்களுக்கு வாய்ப்புகள் அளித்தது. நம் தாய் நாட்டைப் பாதுகாக்க போது

மான யுத்தப் பயிற்சியும், தலைமை தாங்கும் பயிற்சியும் (Leadership) ஏராளமாக கொடுக்கப்பட்டன.

21-10-57ல் எங்களுக்கு முகாமில் கொடுக்கப்பட்டிருந்த எல்லா பொருட்களையும் முகாம் அதிகாரிகளிடம் கொடுத்து தலைவரிடம் விடைபெற்று சுமார் 2 மணிக்கு திருப்பாதிரிப்புலியூர் புகைவண்டி நிலையம் நோக்கி நடந்தோம் அங்கிருந்து கடலூர் பழையநகர் வந்து பள்ளியை அடைந்தோம் அங்கிருந்து படை அதிகாரியிடம் உத்திரவுபெற்று அவரவர் இல்லம் ஏகினோம்.

**Cadet A. M. MOHAIDEEN,**
V F A.

---

ராமு : ஏய் கிட்டு, கூட்டினால் பதினொன்று, பெருக்கினால் முப்பது. அது ஒரு பழத்தின் பெயர் என்ன ?

கிட்டு : எனக்குத் தெரியவில்லையடா

ராமு : 6+5=11. 6×5=30 (விடை) ஆரஞ்சுபழம்

*நா. கோ. பாலகிருட்டினன்,*
*மூன்றாம் படிவம், 'ஆ' பிரிவு*


உயர்ந்த ஜவுளிக்கு உகந்த இடம்

கோல்டன் பளையகாட் கம்பெனியின்

**புதிய ஜவுளி கடை**

விசேஷங்கள், பண்டிகைகள், அன்றாட பாவனைகள் யாவற்றிற்கும தேவையான எல்லாவித பேன்சி ஜவுளி தினுசுகளும் விலை சகாயமாய் கிடைக்கும்

தங்கள் ஆதரவை என்றும் கோரும்

**கோல்டன் பளையகாட் கம்பெனி**

38, சங்கர நாயுடு வீதி, கூடலூர் O. T.

# மதம் (நாடகம்)

*(ஒரு சிறுவனும் மதகுருவும்)*

*சிறுவன் : அந்தோணி ஏன் இன்று புது உடை அணிந்து இருக்கிறன் ?*

*மதகுரு : ஏனென்றல், இன்று திருநாள். இன்று தேவாலயத் திற்குப் போகப்போகிறன்.*

*சிறுவன் : இன்று என்ன திருநாள் ?*

*மதகுரு : இன்று கிருஸ்து மோட்சத்திற்கு ஆரோகணமானத் திருநாள்.*

*சிறுவன் : ஆரோகணம் என்ன அர்த்தம் ?*

*மதகுரு : கிருஸ்துநாதர் பரமண்டலத்துக்கு ஆரோகணம் செய்தார் என்று அர்த்தம்*

*சிறுவன் : ஆரோகணம் செய்தார் என்றல் என்ன அர்த்தம் ?*

*மதகுரு : மேலே போனர் என்று அர்த்தம்*

*சிறுவன் : அவர் எப்படிமேலே போகமுடியும் ?*

*மதகுரு : அவர் இருந்த இடத்தில் இருந்தே போய்விட்டார். ஏனெனில் அவர் கடவுள். சகல வஸ்துக்களையும் உண்டாக்கியவர் அவரே. ஆதலால் அவர் என்னசெய்ய வேண்டுமானலும் செய்ய முடியும்.*

*சிறுவன் : ஆனல, அவர் எங்கே போனர்? வானம் என்பது ஒரே சூன்யவெளி என்று என் தந்தை சொன்னரே ! அங்கே நட்சத்திரங்கள்தான் இருக்கின்றன ; வானத்திற்கு எல்லையே கிடையாது. இப்படியெல்லாம் என் தந்தை சொன்னரே ! அப்படி யானல நம்முடைய கிருஸ்துபெருமான் எங்கேபோனர் ?*

*மதகுரு : (புன் சிரிப்புடன்) எல்லா விஷயங்களையும் நீ தெரிந்துக்கொள்ளவேண்டிய அவசியமில்லை. பிறகு நீ தெரிந்துக் கொள்ளலாம். நமக்கு நம்பிக்கை வேண்டும்.*

சிறுவன் : நம்பிக்கை எதில் ?

மதகுரு : பெரியவர்கள் சொல்லுவதில் நம்பிக்கை

சிறுவன் : அப்படியானல் உப்பு கொட்டிப் போயிற்றே, அதனல் யாரோ செத்துப்போக போகிருர்கள் என்று நான் என் தந்தையிடம் சொன்னேன். அதற்கு என் அப்பா மூடத்தன மானவைகளை நம்ப வேண்டாம் என்று சொன்ஞர்.

மதகுரு : நிரம்பசரி மூடத்தனமான எதையும் நீ நம்பக் கூடாதுதான்.

சிறுவன் : அப்படியானல் 'எது மூடத்தனம், எது மூடத்தன மில்லை' என்று எனக்கு எப்படி தெரியும் ?

மதகுரு : உண்மையான மதக்கொள்கையை நீ நம்ப வேண்டும்.

சிறுவன் : எது உன்மையான மதம் ?

மதகுரு : நமது மதம்

சிறுவன் : அப்படியானல் நானும் கிருஸ்துவ மதத்தில் சேருகிறேன்.

மதகுரு : நிரம்பசரி நீ நாளையதினம் வந்து கிருஸ்துவின் பிள்ளையாவதற்கு ஞான ஸ்னனம் பெற்றுக்கொள்.

சிறுவன் : வணக்கம். நான் நாளைய தினம் தேவாலயத்திற்கு வருகிறேன்.

**சு. ஸ்டீபன்சன்,**
நான்காம் படிவம் 'ஆ' பிரிவு

---

## பங்கு பிரி

பசுமாடுகள் 30. அவைகள் கறக்கும் பால் 30 படி. $\frac{3}{4}$ படி வீதம் 10 மாடுகள், 2 படி வீதம் 10 மாடுகள், $\frac{1}{4}$ படி வீதம் 10 மாடுகள் இவற்றை மூன்று சகோதரருக்கும் மாடுகள் 10ம், அவை கறக்கும் பால் படி 10ம் ஆக இருக்கும்படி பிரிக்கவும்.

***R.* கோவிந்தராஜன்,**
5-ம் படிவம், 'அ' பிரிவு

## இவரா? அவரா ?

**சே. வி. நிக்கோலாஸ்,**

ஆறும் படிவம்

ஆசிரியர் :- கோபு! இராமாயணப் பாடல்களை எழுதியவர் யார் ?

கோபு :- (சினிமா பைத்தியம்) கு. சா. கிருஷ்ணமூர்த்தி ஸார்

## யார் அது ?

கோபாலன் :- எனக்கு இன்புளுயன்ஸா வந்தபோது என்னை டாக்டர் ஆர். எஸ். சாமி தான் காப்பாற்றினார். உன்னை யார் காப்பாற்றினது ஆனந்தா?

ஆனந்தன் :- என்னைக் காப்பாற்றியது **Dr. E. A. S.**

கோபாலன் :- அவர் யாரப்பா **Dr. E. A. S.**

ஆனந்தன் :- அவர்தானப்பா எல்கோஸின், ஆஸ்ப்ரோ, ஸாரிடான்

## அறிவிப்பு

(ஒரு பத்திரிகையில் பின்வருமாறு அறிவிப்பு வந்திருந்தது)

அன்புள்ள தம்பி மோகனுக்கு,

நீ வீட்டை விட்டுப்போன இந்த ஒரு வாரத்தில் வீட்டில் பல சம்பவங்கள் நிகழ்ந்துவிட்டன. படுத்த படுக்கையாக இருந்த அம்மா இப்போது எழுந்து நடக்க ஆரம்பித்து விட்டார்கள். எப்போதும் 'சிடு' 'சிடு' என்றிருக்கும் அப்பா இப்போது மிகவும் சாந்தமாக இருக்கின்றார். இப்போது உன் நண்பர்கள் நீ இல்லாததால் யாரும் வராமலிருக்கிறார்கள். அதனால் வீடு நிசப்தமாக இருக்கிறது. ஆகவே நீ வீட்டிற்கு வரவேண்டுமென்று நினைத்திருந்தால் இந்த அறிவிப்புக்கண்டவுடன் உன் எண்ணத்தை மாற்றிக் கொள்ளும்படி அம்மாவும் அப்பாவும் உன்னை கேட்டுக் கொண்டார்கள்.

இப்படிக்கு,
உன்பிரிவால் சுகமாயிருக்கும்
உன் அண்ணன்
**சந்தநேசன்**

# சாரணீயம்

சாரணீயம் என்றொரு இயக்கமுண்டு, தனியே
அதற்கொரு குணமுண்டு !—அதில்
சார்ந்தவர் சாரணர் எனப்படுவார் !
இனிய இயல்புடன் இலங்கிடுவார் ! —(சார)


உதவி புரிவதில் நிகர்அற்றவராம் !
மக்கள் மடிமை நீக்குவராம் !
நிதமும் நல்ல கடமைநேர்ந்திடுவார் !
உயர்ந்த அன்பினை உற்றிடுவார் ! —(சார)

அன்புகொண்டே மக்கட்கு உதவிடுவார் !
கொள்கைகள் பத்து கொண்டிடுவார் !
மூன்று வாக்கினை உடையவராய்,
ஒற்றுமை யோடு உழைத்திடுவார் ! —(சார)


சேவை சிறப்பெனச் சாற்றிடுவார் !
மற்றவர்க்காக வாழ்ந்திடுவரர் !
ஓய்வை நீக்கிநன்கு உழைத்திடுவார் !
பொய்தனைப் புகலக் கூசிடுவார் ! —(சார)

நேர்மையே மேலெனப் பேசிடுவார் !
என்றும் பிறர்நலம் கண்டிடுவார் !
சோர்வை அகற்றிஎன்றும் உதவிடுவார் !
ஒழுக்கம் கொண்டு உயர்ந்திடுவார் ! —(சார)

***C. A. சங்கரமணி,***
*ஆறும் படிவம்.*



சாரணர்



Staff Photo taken on the eve of retirement of Sri H. V. KRISHNAMURTHI RAO

# அறிஞர்களின் அறிவுரைகள்

✠

1. உலகமே என்னுடைய இல்லம். மனித சமுதாயமே என்னுடைய தோழன். பிறர்க்கு நன்மை செய்வதே என்னுடைய மதம். என் மனமே என்னுடைய கோயில் — **தாமஸ்பெயின்**

2. எளிய வாழ்க்கை என்ற கொள்கையை அப்படியே கடைப் பிடித்து வாழ்வதென்றால் நாம் எங்கேப்போய்ச் சேருவோம்? நம் மூதாதையர்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்து வந்தார்களே அங்குதானே! — **எம். என். ராய்**

3. வறுமைத்தேள் கொட்டினாலும், பழி என்னும் பாம்பு கடித்தாலும், பதறாமல் சலிக்காமல் விடுதலைப்போர் நடத்தியவர் தம் வீரச்செயல்களைப் படிக்கும்போது கோழையும் வீரனாகிறான். கூனனும் சற்று நிமிர்ந்து நிற்கிறான். — **அண்ணாதுரை**

4. மனித மூளை ஒவ்வொன்றும் ஒவ்வொரு பெரிய வயல். அதில் இயற்கை, எண்ணங்கள் எனும் விதைகளைத் தூவுகிறது. பயிர் வளரும் அழகு, சூழ்நிலையாகிய மண்ணையும் சிந்தனையாகிய எருவையும் பொறுத்தது. — **இங்கர்சால்**

5. கலை உரைத்த கற்பனையே
நிலை எனக் கொண்டாடும்
கண்மூடி வழக்க மெல்லாம்
மண் மூடிப் போக — **இராமலிங்க அடிகள்**

6. நம் நாட்டில் தொட்ட இடத்திலெல்லாம் ஒரு தீய வழக்கம் வந்து குந்திக்கொண்டு சமூக முன்னேற்றத்தைப் பார்த்துக் கேலிச் சிரிப்பு சிரித்துக்கொண்டிருக்கிறது. இந்த நாகப்பாம்பைத் தலையில் அடித்துக் கொல்லவேண்டும். — **என். எஸ். கிருஷ்ணன்**

7. "பொன்மொழி என்பதாக ஒன்றும் கிடையாது" இது தான் சிறந்த பொன்மொழி — **பெர்னாட்ஷா**

***இரா. நாராயணன்,***
ஐந்தாம் படிவம் 'ஆ' பிரிவு

## விகடத்துணுக்குகள்

○

ஆசிரியர் :- டேய், கோபு! சமீபத்தில் இந்தியாவிற்கு வந்த இரண்டு புத்தமதத் தலைவர்கள் பெயர் என்ன ?

கோபு :- ? ? ? ! ! ! ... ... ... ...

ஆசிரியர் :- என்னடா மரமாட்டம் நிற்கறே? உன் தலையிலே என்னடா இருக்கு? மூளைக்குப் பஞ்சமா போச்சா ?

கோபு :- (வேகமாக) தெரியும்........சார் ! ஒருத்தர் பேர் தலாய் லாமா சார் ! மற்றொருவர் பேர் பஞ்சன் லாமா சார் !

சி அ நேமிநாதன்,
3-ம் படிவம், 'இ' பிரிவு


# 'டேனியல்ஸ்'

மூக்கு கண்ணாடி, மருந்து,
துப்பாக்கி, துப்பாக்கி
மருந்துகள் விற்பனையாளர்

**டேனியல்ஸ்,**
வண்டிப்பாளையம் ரோடு,
**திருப்பாதிரிப்புலியூர்** (தெ. ஆ. ஜில்லா)

# நீவிர் அறிவீரா ?

1. மிக பெரிய ஏரி சூபிரியர் ஏரி ஆகும். இதன் பரப்பு 31,280 சதுர மைல்கள் !

2. மிக உயர்ந்த கட்டிடம் நியூயார்க்கிலுள்ள 'EMPIRE STATE BUILDING' ஆம், இதன் உயரம் 1250 அடிகள். இதில் 102 மாடிகள் உள்ளன.

3. மிக உயரமான அணை அமெரிக்காவிலுள்ள ஹூவர் என்னும் அணை. இதன் உயரம் 726 அடி; அகலம் 1244 அடி. இது 10,543 மிலியன் காலன் தண்ணீரை தேக்குகிறது.

4. மிக உயரமான சிலை அமெரிக்காவிலுள்ள சுதந்திர சிலை. இதன் உயரம் 151 அடி !

5. மிக பெரிய அலுவலக கட்டிடம் அமெரிக்காவிலுள்ளது. இது 34 ஏக்கரில் அமைந்தது. நிலப் பரப்பு 60,00,000 சதுர அடி. இதன் நடைபாதை நீளம் 17 மைல். இதில் தினமும் 3400 பேர் வேலை செய்கின்றனர்.

6. மிக நீளமான பாலம் சான்பிரான்ஸ்கோவில் உள்ளது. இதன் நீளம் 43,640 அடி.

7. மிக பெரிய மரம் கலிபோர்னியாவிலுள்ள 'ஹாம்போல்ட் ஸ்டேட் பார்க்'கிலுள்ள செக்கோவியா மரமாகும். 364 அடி உயரமுள்ள இது 2000 பவுண்டு நிறை உள்ளதாம்.

8. மிக பெரிய டெலிஸ்கோப் கலிபோர்னியாவில் உள்ள POLO MAR என்னும் மலை சிகரத்தில் உள்ளது. இதில் உள்ள லென்சின் குறுக்களவு 200 அங்குலம்.

9. மிக நீளமான குகை பாதை ஜப்பானிலுள்ள, 13½ மைல் நீளமான டன்ஞ என்ற குகையாகும்.

10. மிக உயரமான நீர்வீழ்ச்சி வெனின் சுலாவில் உள்ள ஏஞ்சல் ஆகும். இதன் உயரம் 3300 அடி.

11. சமுத்திரத்தில் மிக ஆழமான இடம் பிலிப்பைன் தீவுக்கு அருகிலுள்ளது. ஆழம் 35400 அடி.

12. உலகிலேயே மிக உஷ்ணமான பிரதேசம் ஆப்பிரிக்காவிலுள்ள அஸ்ஸின் லிபியா. அங்கே உஷ்ணம் 136° F.

**கோ. இராமச்சந்திரன்.**
நான்காம் படிவம் 'ஆ' பிரிவு.

# 'பின்பற்றுக'

1. நாம் ஒவ்வொருவரும் ஒரு கருணைக் கோயில் என்று நினைக்கவேண்டும்.

2. நாம் பயத்தை படுகுழி தோண்டி புதைத்தல் வேண்டும்.

3. நாம் கவலை என்னும் காலனை பாழுங்கிணற்றில் தள்ளுதல் வேண்டும்.

4. நாம் தர்மத்தை சொந்த நன்மைக்காகவாவது தனம் என்னும் தண்ணீரால் வளர்க்கவேண்டும்.

5. நாம் அன்னியர்களுக்காக பிரதி தினமும் ஒரு நிமிஷமாவது உழைக்கவேண்டும்.

6. நாம் தைரியத்தை சதா துணைக்கொள்ளவேண்டும். அது நம்மை உன்னத பதவியில் கொண்டுசேர்க்கும் ஏணி.

7. நம் பலத்தில் கொஞ்சமும் சந்தேகம் கொள்ளக்கூடாது. நம்மால் செய்யமுடியாத காரியமே இவ்வுலகில் இல்லை. நம் மனதுக்கு ஏராளமான சக்தியிருக்கிறது. எதையும் செய்து சாதிக்க முடியும்.

8. நாம் சோம்பேறித்தனத்தை வெட்டி வீழ்த்தி அங்கே சுறுசுறுப்பை நட்டு பயிராக்கவேண்டும்.

9. அன்னியருடைய அதிர்ஷ்டத்தில் ஆனந்தமும், அவர்கள் துர் அதிர்ஷ்டத்தில் கவலையும் கொள்ளுதல்வேண்டும்.

10. அன்பு என்னும் ஆயுதமாகப்பட்டது, 'ஆட்டம் பாமை' விட மிகவும் சக்தி வாய்ந்தது. அநேகமாயிரம் மைல்கள் தூர-முள்ளவர்கள் மேலும் இதைச் செலுத்தலாம். அன்பு என்னும் அம்பு அந்நியர்கள்மேல் பாயும்போது அதை வெறுப்பாரில்லை.

**D. இந்திராதேவி,**
மூன்றும் படிவம் 'இ' பிரிவு.

# தலைவர்களின் தனியுரைகள்

1. அன்பிற்காக விட்டுக்கொடு. அன்பு என்றும் வாழட்டும்.
— **டாக்டர் மு. வரதராசனார்**

2. சிந்தனை செய்க ; சிந்தனை செய்க ; எந்தப் பொருளையும்
சிந்தனை செய் ; சிந்தனை.
ஆயவை உற்றுதல் உறுதி ஆய்க ; ஆய்க எதையும்
ஆய்பதைப் பின்பற்றி. — **திரு. வி. க.**

3. எனக்குப் பிடித்தமான பொருள் புத்தகம். புத்தகத்திற்காகப் பணம் செலவழிப்பதில் நான் ஊதாரி என்ற பட்டத்தைப் பெறவும் தயார். — **பிரதமமந்திரி நேருஜி**

4. மலர்களைச் சுற்றி மணம் கமழும். அதுபோலத்தான் செயற்கரிய செயல்களைச் சூழ்ந்து புகழ் திகழும். — **சாக்ரடீஸ்**

5. புதிய தமிழகத்தின் முதல் சீர்திருத்தம் சாதி ஒழிப்பே. சாதி என்ற மொழியே இனி நமது அகராதியில் தேவையில்லை.
— **சுத்தானந்த பாரதியார்**

6. " தாகம் என்று வருபவர்க்குத்
தண்ணீரை அளியாமல்
ஆகமங்கள் ஓதிநிற்றல்
அழகாமோ? அறமாமோ?
— **கவிமணி தேசிக வினாயகம் பிள்ளை**

7. உலகம் முழுவதும் தேடிப்பாருங்கள், விஞ்ஞானத்துக்கு விரோதியாக ஒரே ஒரு மனிதனைத்தான் நீங்கள் காணமுடியும். அவன் பெயர்தான் மூடநம்பிக்கை. — **இங்கர்சால்**

***G. அதிசயம் சாமுவேல்,***
*முதல் படிவம் 'அ' பிரிவு.*

## விடுகதைகள்

○

மண்போல இருந்த அந்தராணி அக்கினியில் பட்டவுடன்
மணத்தை அள்ளி வீசுகிருள் மகாராணி — (சாம்பிராணி)

கோடையிலே நம்மைக் காப்பவர் இரு சகோதரர்கள்
மழையிலே நம்மைக் காப்பவர் ஒரு சகோதரர்
— (செருப்பு, குடை)

விதையும் விதைக்கவில்லை செடியும் செழிக்க வில்லை
தண்ணீரைப் பாய்ச்சிவந்தேன் தகதகவென்று பூத்துவிட்டது
அப்பூவில்லா வீடும் இல்லை அதிக விலையுமில்லை
காந்திஜீ செய்த போராட்ட மதனுலே — (உப்பு)

கோ. வே. சுந்தரமூர்த்தி,
மூன்ரும் படிவம், ‘ அ ’ பிரிவு

போன் நெம்பர் 16

கூடலூர் O. T. குட்ஷெட் எதிரில் உள்ள

**மரவாடியில்**

○ கட்டிட வேலைகளுக்குத் தேவையான மரம், ○
○ சவிஸ்கள், பலகை, பட்டை, ஓடு ○
○ முதலிய சரக்குகள் குறைந்த ○
○ விலையில் கிடைக்கும் ○

○

**எஸ். எம். & சன்ஸ்,**

மர வியாபாரம், கூடலூர் O. T.

தலைமை ஆபீஸ் : **சிதம்பரம்**

# கண்டுபிடியுங்கள்! கடைசொற்களை!

1. ரமணி கூந்தல் சுருட்டை
தூங்கும்போது விடுவது........
மாட்டை அடிப்பது........
மூக்கில் இரண்டு........

2. முகம்பார்ப்பது ஆடி
ஊறுகாய் வைப்பது........
வீட்டின்மேல் இருப்பது........
அவன் ஒரு........

3. பாமரர் வைப்பது சிண்டு
வாழையின் நடுவில் இருப்பது......
மணியன் ஒரு......
அவன் சாப்பிடுவது கற்......

4. இந்திய பிரதமர் நேரு !
அவன் குடிப்பது......
வீடுகட்ட உதவுவது......
இதைக்கொஞ்சம் யோசித்துப்......

5. நாகரீகர் வைப்பது கிராப்பு
குளிக்க உதவுவது .....
சாமான் விற்பது......
கையில் அணிவது......

6. இது ஒரு கோணம்
மாடு போடுவது......
தீபாவளியில் வெடிப்பது......
அர்சுனன் விட்டது......

7. பசு ஒரு சாது
அவள் பெயர்......
புண்ணிய தீர்த்தம்......
அவனுடன் என்......

**இரெ. கோபாலன்,**
ஆறாம் படிவம்

[விடை 56-ம் பக்கம் பார்க்க]

# தமாஷ்

O

1. கடன் கொடுத்தவர் : அசலை மட்டும் கொடுக்கிறீர்களே? வட்டி எங்கே ?

கடன் வாங்கியவர் : ஐயா புண்ணியவானே, இப்போது நான் கொடுத்திருப்பது வட்டித்தான் ! அசல் அப்புறம் வரும்!

2. கணவன் : என்ன இப்படிச் செலவு ஏறுகிறது ? இன்று முதல் பால் வாங்குவதை நிறுத்திவிடு !

மனைவி : உங்களுக்கு முன்னால் பால்காரனே அதை சொல்லி விட்டுப் போய்விட்டான். பாக்கியைத் தீர்த்தால்தான் வருவானாம்!

3. எஜமான் : தேதி இன்றைக்குத்தான் இருபது ஆகிறது. அதற்குள் இந்த மாதச் சம்பளத்தை கேட்கிறாயே! உன்னை நம்பி எப்படி கொடுக்கிறது ?

வேலையாள் : எஜமானனை நம்பி நான் இருபது நாள் வேலை செய்யலிங்களா ? நீங்க என்னை பத்து நாளைக்கு நம்பக் கூடாதுங்களா ?

4. "தண்ணீரில் இருப்பவர் : ஐயோ ! நீந்தத் தெரியாதே ! காப்பாற்றுங்களேன்! "

கரையில் இருப்பவர் : "ஏனையா கத்தறீர்? எனக்குக் கூடத் தான் நீந்தத் தெரியாது! நான் உம்மைப்போலக் கத்துகிறேனா பாரும்! "

**V. M. மன்சூர்,**
மூன்றாம் படிவம் 'ஆ' பிரிவு

# எல்லாம் சமரசம்

✠

ஒரு மாணவன் தூயதாவீது உயர்நிலைப்பள்ளியிலிருந்து அவன் வீட்டிற்கு வரவேண்டுமானால் ஓர் பாதை வேண்டும். மேலும் வேறு பல பாதைகளின் வழியாகவும், அவன் வீடுபோய்ச் சேரலாம். பள்ளிக்கும் வீட்டிற்கும் இடையில் உள்ள பாதையில் பல மோட்டார்கள், சைக்கிள்கள், வண்டிகள் போன்ற பல ஊர்திகளிலிருந்து காத்துக் கொண்டு, இறுதியில் வீட்டை அடைகிறான். அவ்வாறு ஒருவன் ஓர் ஜோதி என்னும் திரு-வடியை அடைய வேண்டுமானால் மதம் என்னும் பாதை வேண்டும். இம் மதங்கள் பல உண்டு. ஆனால் இதனிடையில் பல துன்பங்கள் ஏற்படலாம். துன்பங்களையும் பொருத்திருக்க வேண்டும். எல்லா மதங்களும் இறைவனின் திருவடிகளை போய்ச்சேரும் வழியைத்தான் கூறுகின்றன. மதங்கள் யாவும் அஹிம்சை, சத்தியம், நம்பிக்கை முதலிய நற்பண்புகளின் அவசியத்தைப் பற்றியே போதிக்கின்றன.

இப்பரந்த உலகில் ஓர் நாடகத்தில் ஒருவன் ஒரே வேடம் தரித்து வருவான் என்றால் அதை கவர்ச்சியுடன் பார்க்கும் மக்களுக்கு வெறுப்பு ஏற்படும். ஆனால் அவன் அடுத்தடுத்து வில்லனாகவும், கதாநாயகனாகவும், விகடனா-கவும், மந்திரவாதியாகவும் மாறி மாறி வருவானேயானால் பார்ப்பவர்கள், அவன் ஏற்று நடிக்கும் பாகத்தை ஆர்வத்துடன் பார்ப்பார்கள். அதுபோல இந்த பரந்த உலகத்தில் கடவுள் பல அவதாரம் எடுத்து ஒவ்வொரு மதத்-தினருக்கு ஒவ்வொரு தோற்றமாக காட்சி அளிக்கிறார். ஒரு வீட்டில் உள்ள ஒருவன் அவன் மனைவிக்கு கணவனாகவும், அவன் தன் மகனுக்குத் தகப்பனாகவும், பேரனுக்குப் பாட்ட-னாகவும் தோற்ற மளிக்கின்றான். இவ்வாறு ஒரு மனிதன் பல விதங்களில் பாவிக்கப் படுவதுபோல் ஒரே கடவுள் பலமதத்-தவர்களால் பலவாராக வணங்கப் படுகின்றார். எல்லா மதங்-களுக்குப் புலப்படாவிடினும் கடவுள் இருக்கிறார் என்று போதிக்கின்றனர்.

குளிர், காற்று, மின்சாரம், சப்தம் இவைகள் கண்களுக்குப் புலப்படாவிடினும் இருக்கின்ற உண்மையான பொருள்கள் அல்லவா! கற்கண்டிலிருக்கும் தித்திப்புச் சுவை, படிகாரத்தில் இருக்கும் துவர்ப்புச்சுவையும், உப்பில் இருக்கும் கரிப்புச் சுவையும், புஷ்பத்திலிருக்கும் நறுமணம் ஆகிய இவைகள் கண்களுக்குப் புலப்படாவிடினும் நமது உடலிலுள்ள ஐம்புலன்களினுல் அவற்றை சுவைக்க அல்லது உணர முடியும். அதுபோல் கடவுள் உண்டு என்பதை பல நிகழ்ச்சிகள், கதைகள் மூலம் நாம் இன்று அறிகின்றோம்.

மின்சாரத்தை நம்மால் பார்க்க முடியாவிட்டாலும் அதை காற்று இல்லாத ஒரு கண்ணுடிக்குடுவையில் சிறு கம்பியின் மூலம் சேர்த்தால் (பல்பு) நம்மையெல்லாம் ஆனந்த கடலில் மூழ்கவைக்கும் ஜோதி ரூபமாக மாறுகிறது அதுபோல் அன்பர்களின் இதயம் என்னும் காற்று இல்லாத மூடியினுள் பக்தி என்னும் கம்பியினை இணைத்தால் கடவுள் ஜோதி ரூபமாய் விளங்குகின்றுர்.

சூரியன் ஏரி. குளங்களில் உள்ள தண்ணீரைத் தனது கிரணங்களில் உள்ள உஷ்ணத்தால் நீராவியாக மாற்றிக் கொள்ளும் பொழுது நமது கண்களுக்குப் புலப்படாது. ஆனுல் அது குளிர்ச்சி அடைந்து இந்த பரந்த உலகத்தில் மழையாக பொழியும் பொழுது நமது கண்களுக்குப் புலப்படுகின்றது. இவ்வாறு நமதிடத்தில் மறைமுகமாகத் துன்பங்களை அறிந்து இறுதியில் அருள் செய்கிறுர். ஒரு மதத்தினரிடம் சென்று உங்கள் மதம் கூறும் நெறிகள் தவறு என்று கூறுவது, "பற்றி எரிகின்ற வீட்டிற்கு சென்று வீட்டுக்காரனிடம் சுருட்டுக்கு நெருப்பு கேட்பது போலாகும்."

ஆதலால் பிற மதத்தைப்பற்றி இழிவாக கூறுவது கூடாது. பிற மதத்தை குறைகூறுகிறவன் தன் மதத்தை இழிவாக கூறுபவன் ஆவான். இதைக் குறித்தே இராமகிருஷ்ணபரமஹம்ஸரும் "எவன் ஒருவன் பிற மதங்களைப் புகழ்கின்றுனே அவனே தன் மதத்தை வளர்ப்பவன் ஆவான்" என்று கூறியுள்ளார். இதையே பல பெரியவர்களும் விவரித்துக்கூறியுள்ளனர். சுத்த நீர் நிறைந்த பெரிய குளங்களில் பாசி உண்டாகாது. ஆனுல்

தேங்கிக்கிடக்கும் அசுத்தமான குட்டைகளில்தான் பாசி உண்டாகும். அதுபோல் நற்குணம் படைத்த பெரியவர்கள் மதத்தை துவேஷம் செய்யார். ஆனால் மத வெறியும் பிற மதப் பழிப்பும் அற்றவனாக இரு என்று இராமகிருஷ்ணபரமஹம்ஸர் கூறியுள்ளார். மதங்கள் யாவும் இறைவனடி போய்ச்சேர கூறும் நீதிகள் யாவும் சமரசமாய் இருக்கின்றன. எனவே மதங்களின் கொள்கைகள் ***"எல்லாம் சமரசம்"*** ஆகும்.

***எஸ். கே. சாமி,***
*ஆரும் படிவம்.*

---

**விகடங்கள்**

○

1. *அம்மா : ராமு ராமு சீக்கிரம் வாடா பிறகு படிக்கலாம் காயம் ஆயிடுத்து*

*ராமு : எங்கே ? எங்கே ? அம்மா*

*அம்மா : பக்கத்துக் கடையில் போய் பெருங்காயம் வாங்கிக் கொண்டு வா*

2. *மஹமது : அம்மா அம்மா தம்பி அலீம் சாகடையில் விளையாடிக்கொண்டு இருக்கிறான்*

*அம்மா : அவனைக் கொண்டுவந்து உள்ளே விடு. இப்பொழுதுதான் புதுச்சட்டை போட்டிருக்கிறேன் அழுக்கு ஆகிவிடும்*

*மஹமது : இல்லே அம்மா சாக்கடை இல்லை. டீக்கடையில் விளையாடிக் கொண்டிருக்கிறான்.*

***S. ஜெயராமன்***

# விடுகதை திரட்டு

○

1. முள்ளம்பன்றி வயிற்றுக்குள்ளே வைக்கோல் குடலுக்குள்ளே வைரமணி கண்டெடுத்தேன் — (பலாப்பழம்)

2. பச்சக்கன்னி மடிபட்டாள் பவளக்கன்னி பொடிபட்டாள் வெள்ளைக்கன்னி தேய்பட்டாள் மூன்று கன்னியும் கடிபட்டுச் சிவப்புக் கன்னி பிடிபட்டாள் — (வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு)

3. பள்ளிக்கூடம் போகிற பட்டம்மாளுக்கு கையிலே ஒரு டை வாயிலே ஒரு டை தலையிலே ஒரு டை — (குடை, வடை, சடை)

4. அடுக்கடுக்காய் பட்டுடுத்தி அமர்ந்திடுவாள் கடைத்தெருவில் — (வெங்காயம்)

5. மூடாத வாய்க்கு முழம் வால் — (அகப்பை)

6. புலிமாது வடிவுடையோன் புவி மீது துள்ளிடுவேன் பாலர் கையில் அகப்பட்டு பதை பதைத்துத் துடித்திடுவேன் — (பந்து)

7. சின்னச் சின்ன தலைப்பாக்காரர் சிங்காரத் தலைப்பாக்காரர் சிறு வீட்டில் சேர்ந்திருப்பார் வீட்டு வெளிச்சுவரில் தலைப்பாகையைத் தட்டிவிட்டால் தபுக்கென்று எரிந்து விழுவார் — (தீக்குச்சி)

8. கடித்தால் கடிபடாது பிடித்தால் பிடிபடாது — (தண்ணீர்)

**செகதாம்பாள்,**
இரண்டாம் படிவம் ‘இ’ பிரிவு

---

[51-ம் பக்கத்தின் விடை]

1. குறட்டை, சாட்டை, ஓட்டை
2. ஜாடி, மாடி, கேடி
3. தண்டு, மண்டு, கண்டு
4. மோரு, நாரு, பாரு
5. சோப்பு, ஷாப்பு, காப்பு
6. சாணம், வாணம், பாணம்
7. மாது, சேது, வாது

# கடைச்சொல் முடிக்கும் சொற்கள்

1. மலையில் இருப்பது கல்
வாயில் இருப்பது... ....
கடையில் இருப்பது........
மரததில் இருப்பது .......

2. மரத்தில் இருப்பது கனி
நாய்மேல் இருப்பது........
கழுத்தில் இருப்பது........
மானத்தைக் காப்பது........

3. பயிரைக் காப்பது வேலி
உட்கார உபயோகிப்பது........
காட்டில் வளர்வது........
வேலைக்காரன் பெற்றது........

4. வீட்டில் இருப்பது ஜன்னல்
வானத்தில் உண்டாவது........
சடையை முடிப்பது........
சுதந்திரம் வாங்கியது .......

5. தண்ணீர் இறைப்பது ஏற்றம்
இயற்கையில் காண்பதுநல்ல........
சூதில் அடைவது........
பூவில் இருப்பது........

*சி. கேதார்சங்கர்,*
*நான்காம் படிவம் 'அ' பிரிவு*

---

1. *பல், மல், செல்*
2. *உணி, மணி, துணி*
3. *நாற்காலி, கருங்காலி, கூலி*
4. *மின்னல். பின்னல், அண்ணல்*
5. *தோற்றம், ஏமாற்றம், நாற்றம்*

# School Report

With the reopening of another section in Class 5 in June 1957 there has been an increase in strength over that of last year. Though it is the policy of the management to restrict the strength to as few as possible, yet the pressure for admission at the time of the reopening is so great that it is not possible to refuse admission in these days when there is a clamour for education. Added to this there are the several fee concessions to help one or the other. The result is while the expenses go up the fee income becomes less and the burden on the part of the management grows heavier and heavier.

Two rooms one for the staff and the other for games and N. C. C. have been built adjoining the office room to satisfy two of the conditions laid down by the Department when permanent recognition was accorded to this school. A portion of the verandah of Alaganantham Hall has been partitioned off to be used as a retiring room for girls.

In the matter of S. S. L. C. examination results of the Diocesan schools in the mofusil we had to be contented with a second place this year the first being taken by St. Andrew's High School, Arkonam. 82% of our pupils were declared eligible two of them scoring more than 400 and above out of a total of 600 marks Another feather in our cap is the signal honour of the winning of the gold medal by C. A. Sankaramani, a pupil of Form VI at the District Tamil Essay competition held in connexion with the Centenary Celebrations of our freedom struggle. A photo of this illustrious pupil appears elsewhere in this issue.

Last year we had to report about the retirement of Sri H. V. Krishnamurthi Rao, and this year Sri S. Muthukrishnan, B. A., L. T., will be leaving us as he has reached his 60th year. Though he has been with us only for eight years after having spent the prime of his life in one of the municipal schools nearby, yet he has proved himself so dependable and amiable that the parting at the end of the year will be rather painful both to the school and himself.

Sri G. H. Clarence, B. A., L. T., underwent a short course in museum technique during the summer holidays and the visible signs of the benefits he has derived from the course are the valuable additions he has made to our school museum. Two of our members of our staff attended refresher course in the teaching of English held at Annamalainagar. Sri N. J. Gnaniah was deputed to undergo training in Music at Pasumalai during September and he has already taught the pupils how one of the lyrics sung in the assembly ought to be sung.

With regard to sports we have not done anything spectacular this year though Volley ball seems to have been our forte all these years.

Remembering the many mercies that God has been pleased to bestow upon us, we should like to raise our voice in thanks giving.

All good gifts around us
Are sent from heaven above ;
Then thank the Lord, O thank the Lord.
For all His love.

**G. M. ARUMAINAYAGAM,**
*Headmaster.*

Cudddalore O. T.
1—1—'58

# "The Power of Words"

How men first learnt to invent words is unknown : In other words, the origin of Language is a mystery. All we really know is that men unlike animals, somehow invented certain sounds to express thoughts and feelings, actions and things, so that they could communicate them to each other; and that, later, they agreed upon certain signs, called letters, which could be combined to represent those sounds and which could be written down. These sounds, whether spoken or written in letters, we call words.

Words are alive. As time passes they are born, grow to full maturity and die And they changed morally. Some that began as common words become great and noble in meaning, like "*religion*", that originally means a "*bond*". And some innocent words become degraded ; for example a "*villain*" originally meant simply a farmer and "*knave*" a boy servant "*Damn*" meant at first to condemn. And words, like coins, get worn and rubbed with use, until they lose their true meaning and become weak and ineffective. For example, "*nice*" meant originally dainty, delicate, fine while now it means almost anything We should therefore choose our words carefully and use them accurately or they make our speech silly and vulgar



# School Magazines and their Uses

A school magazine serves several useful purposes. The most important, perhaps, being that, if it is well edited, it fosters "*esprit de corps*" or that may be called school patriotism It can be made to help the scholars to realise that they are a united body, however different may be their individual tastes and occupations! and it should teach them to be proud of the school to which they belong, loyal to its bests interests and anxious to uphold its best traditions The School Magazine also serves as a link between the present scholars and the old boys and help to keep the latter in touch with their old school. As former pupils read the school news month by month they feel something of the old pride in the place where they got their education and their interest in it is maintained. If their school issues no magazines these "old boys", scattered about the country and absorbed in their own occupations are liable to forget their school, and lose interest in its welfare.

The school magazine encourages the boys to practise writing, by affording opportunities to budding authors to see their compositions in print; especially if the scholars are encouraged in healthy rivalry by the offer of prizes for the best articles that appear in the year. A boy that takes little interest in doing a set exercise in class will put forth his best efforts when he knows that his composition will appear in print and may win the prize. The school Magazine also affords a good platform from which the Head Master from time to time speaks to the whole school on matters of school life and discipline, and the more serious matters of character and conduct.

**R. GOPALAN,** VI Form

MADRAS

For any kind of

# PRINTING

CONTACT

Phone No. 113

THE SARASWATHI PRESS

CUDDALORE

•

Service our Motto

AND

Satisfaction our only aim

Prop: T. V. DEVARAJEN

# विनोद

[ एम. कुलशेखरन V Form B ]

मनुष्यमात्र के जीवन में विनोद का बडा स्थान है। विनोद के बिना यह जीवन असार है, सूना है। दुख-दर्द से घिरे जीवन में विनोद मानों एक वरदान सा है। विनोद मन बहलानेवाला है, सांत्वना देनेवाला है, दुखों को भुला देनेवाला है, कटाक्ष भी करने वाला है।

हंसी का कारण खुशी समझा जाता है पर वैसी बात नहीं। अब्रहां-लिंकन अकसर कहा करते थे-"मैं क्यों हंसता हूँ, क्या कोई जाने? इसीलिए कि मैं न रोऊँ।" इससे मालूम होता है कि विनोद का मूल उल्लास नहीं, किन्तु असीम शोक के समय ही उसका उदय होता है।

विनोद का तो दिमाग से संबंध नहीं। उसके बारे में कार्लैल का कथन उल्लेखनीय है। वे कहते हैं—"सच्चा विनोद मस्तिष्क से फूटनेवाला नहीं, वह तो उर से झरनेवाला है; वह डाह का मनोवेग नहीं, प्रेम का प्रतीक है, वह मामूली हंसी में नहीं, गहरी मुस्कान में है।"

—:*:—

# कृत्रिम चंद्र

[ वे. सु. कृष्णमूर्ति VI Form ]

रूस ने हाल में अपने नये वैज्ञानिक आविष्कार से संसार भर को, खास कर अमेरिका को अचंभे में डाल दिया है। उसके प्रशंसनीय आविष्कारक, श्री कापिज़ा पीटर का बनाया यह कृत्रिम चंद्र, राकेट के ज़रिये भूगोल के ऊपर घूमने छोड दिया गया है। वह फी घंटे १८००० मील की गति से भूगोल को ९५ मिनिट में एक बार चक्कर काटता रहता है। वह चांद गगन की

आबोहवा, परिस्थिति एवं प्रतिक्रिया· इनके बारे में समाचार बेतार के तार द्वारा भेजता रहता है। इस चांद का नाम "स्फूट्निक" दिया गया है। अंतर राष्ट्रीय भूभौतिक वर्ष के महान प्रयत्नों में यह पहला कदम है।

—:*:—

# क्या तुम जानते हो?

[रा· सुरेंद्रबाबू VI Form]

1. स्तनपायियों में कौन चल नहीं सकता और पक्षधारियों में कौन उड नहीं सकता?
2. किस जंतु की पलक नहीं है?
3. संसार में सबसे ऊँचा जलप्रपात क्या है?
4. ज्वालामुखियों में उन्नत एवं सक्रिय कौन है?
5. जानवरों में सबसे ऊँचा कौन है?
6. सबसे कीमती धातु क्या है?
7. दुनियाँ में सबसे ठंडा स्थान कौन है?
8. संसार में सबसे गहरी खान कहां है?
9. हेलिकाप्टर का किसने आविष्कार किया?
10. दुनियाँ में सबसे छोटा स्वतंत्र राज्य कौन है?

## जवाब

1. तिमिंगल, शुतुरमुर्ग
2. मछली
3. वेनिज्वेला का एँजल प्रपात 3212'
4. कोटोपाक्सी 19550'
5. जिराफ

6. रेडियम
7. सैबीरिया का वरकोयान्स्क
8. मैसूर के कोलार में ऊरगम 10000'
9. फ्रांस के ब्रेगुए
10. वाटिकन नगर-947 लोग

—: * :—

# क्षणभंगुर जीवन

[क. जयरामन B.A., B.T., हिन्दी पंडित]

शांति से दम लेनेवालो, कल परसों का भरके दम ।
जरूर इक दिन दे जायेगी, मृत्यु तुम्हें चुपके दम ॥ 1 ॥
उदित अरुण का अस्त-सा, ध्वनितरंग सा व्योम में लीन ।
मिट्टीका पुतला मिट्टी में, समा जायगा दीन सार हीन ॥ 2 ॥
सो सोकर जागते हो प्रतिदिन, हां लंबी-सी निद्रा है मृति ।
सर्वस्व तुम्हारा करले हरण, मिटा देगी तुम्हारी स्मृति ॥ 3 ॥
निष्ठुर है अंतक निष्पक्ष भी, जो न देखेगा सर अवसर ।
किसी भी क्षण कर दे शुष्क, भरा तुम्हारा जीवन सर ॥ 4 ॥
भागते क्यों मौत से निरर्थक भागो अवद्य कर्म से सदा ।
मरना इक घडी निश्चित है, होके रहेगा जो है बदा ॥ 5 ॥
जन्म जन्मांतर पश्चात् तुम्हें, मिला है अलभ्य मानुषरूप ।
पूर्वजन्मों की, की हुई कई सुकृतियों के फलस्वरूप ॥ 6 ॥
व्यर्थ न गंवाना दिन अपने, आत्म चिंतन करो बार बार ।
आज न होतो कैसे कल, होगे मौत के लिए तैयार ? ॥ 7 ॥
थमेगा न काल क्षण के लिए भी, आ धमके किसी भी पल ।
देखके सपना फिर क्यों तृष्णा, जीवन ही सपना अविकल ॥ 8 ॥

—: * :—

# विरह-गीत

[ क. जयरामन B.A., B.T., हिन्दी पंडित ]

मस्त बहार, ठंडी बयार दिल को लुभाये
मगर ऐसे में तुम नहीं सजन, कोई न भाये ( मस्त )
दिल की लगी जानूं मैं, और कोई न जाने
यहाँ कौन है मेरे दिल की सदा जो पहचाने ( मस्त )
थक गया मैं रात भर गिनके सितारे
तुम्हें ढूंढ रहा हूँ राह पर नैन पसारे
चांदनी भी आज उगल रही अंगारे
तुम्हें मेरी कसम आजा तुम्हें जिया पुकारे ( मस्त )

[ 'चिट्टुकुरुवि' गीत का राग ]

—: * :—

# सच्चा प्रेम

[ क. जयरामन B.A., B.T.. हिन्दी पंडित ]

चाहे तू भूल जा हमें, हम तुझे कभी न भूल जायंगे
तू हमारा रहे न रहे, हम तेरी प्रीत हरदम निभाएँगे
दिल से न भुला तू हमारी वफाएँ
ऐसा न हो कि हम तुझसे मिल न पाएँ
तेरी कसम हम तेरे हो चुके जीवन भर हम तेरा गीत गाएँगे ( चाहे )
चाहे तू रहे हमसे लाख आज़ाद
फिर भी हमारे दिल में रहे तेरी याद
चाहे ठुकरा दे, चाहे प्यार करे, हम तेरा नाम दुहराए जाएँगे ( चाहे )

[ "माशिला उण्मैकादले" गीत का राग ]

# संयुक्त राष्ट्र संघ

[ रा. गोपालन VI Form ]

विश्वशांति के हेतु प्रथम महायुद्ध के बाद राष्ट्रसंघ का निर्माण हुआ, पर उसकी किसी विशेष बल-शक्ति के अभाव में उसके देखते देखते द्वितीय महायुद्ध का बीज बोया गया। इस युद्ध में कई विनाशकारी शस्त्रों से बडा विध्वंस हुआ। अंत में सत्ताधारी राष्ट्रों ने अटलांटिक संधि के अनुसार संयुक्त-राष्ट्र-संघ का निर्माण किया।

संघ का भवन न्यू यार्क नगर में है। इसके छे बडे विभाग हैं। सामान्य परिषद में बयासी राष्ट्रों के सदस्य हैं। इसमें प्रतिराष्ट्र पांच प्रतिनिधि भेज सकता है पर एक राष्ट्र का एक मत ही गिना जाता है। इसके अध्यक्ष का प्रतिवर्ष निर्वाचन होता है। इस साल न्यू जीलंड के सर लेस्ली मन्ड्रो उस पद के लिए निर्वाचित हैं।

सुरक्षा परिषद में कुल ग्यारह सदस्य हैं जिनमें अमेरिका के संयुक्त राष्ट्र, इंग्लैंड, रूस, चीन तथा फ्रांस स्थायी हैं और बाकी छे प्रतिवर्ष निर्वाचित किये जाते हैं। स्थायी सदस्यों को निषेधाधिकार है।

मंत्रालय सभी कार्रवाइयां करता है जिसके अध्यक्ष पांच साल के लिए चुने जाते हैं। आजकल श्री डाक हेमर्शील्ड उस हैसियत में काम कर रहे हैं।

हालंड की राजधानी दि हेग नगर में अंतर राष्ट्रीय न्यायालय स्थित है जो राष्ट्रों के बीच होनेवाले झगडों का निपटारा करता है। न्यासी परिषद पिछडे राष्ट्रों की उन्नति का भार अपने ऊपर ले लेता है।

शैक्षणिक, वैज्ञानिक एवं सांस्कृतिक संस्था तो विश्व भर में साक्षरता के प्रचार, स्वास्थ्य की रक्षा एवं संस्कृति की रक्षा का काम करती है। हर साल अक्तूबर चौबीसवीं तारीख को राष्ट्रसंघ दिवस मनाया जाता है।

—: * :—

# रहना हरदम होशियार

[क जयरामन B.A., B.T., हिन्दी पंडित]

ब्रह्म ही सत्यं, मिथ्या है संसार
झूठा है जग का प्यार, रहना हरदम होशियार
तेरे जीवन की नैया है मझधार
दीखता है आर न पार, रहना हरदम होशियार ॥
माया के गहरे गड्ढे में गिरके
तत्व कभी तू भूल न जाना
निज आत्मा की ईश्वरता को
पहचानके होश में आना
अलभ्य नररूप मिले न बार बार
गंवा न दे बेकार, रहना हरदम होशियार ॥

["कितना बदल गया इन्सान" के गीत का राग]

—: * :—

[illegible library stamp]